முச்சந்தி முரளி




“நடக்குமென்பார்
அது நடக்காது.
நடக்காதென்பர்
அது நடந்துவிடும்
கண்டீயளோ”


Registered as a Newspaper

பக்கங்கள் – 20+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 203

ஞாயிற்றுக்கிழமை
16 ஜூன் 2024


# சர்வஜன வாக்கெடுப்பால் பதவியில் நீடிக்கார் ரணில்

## ராஜித சேனாரத்ன தகவல்



**கொழும்பு, ஜூன் 16**

**சர்வஜன வாக்கெடுப்புமூலம் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம், ஜனாதிபதி ரணிலுக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

18

## மைதானத்துக்குள் புகுந்து மீசாலையில் வாள்வெட்டு

### காடையர் குழுவை மடக்கிப்பிடித்து முறையாகக் 'கவனித்த' மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கரப்பந்தாட்ட இறுதியாட்டம் நடைபெறவிருந்த மைதானத்துக்குள் புகுந்து வாள்வெட்டு நடத்திய குழுவொன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம்

18

## ராஜித, பொன்சேகா ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அடுத்துவரும் நாள்களில் அமையவுள்ள பிரமாண்டக் கூட்டணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் இணையவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

தற்போது உதயமாகியுள்ள 'புதிய கூட்டணி'யும் மேற்படி கூட்டணியில் இணையவுள்ளது என அறிய முடிகின்றது. அமையவுள்ள ரணில் ஆதரவுக்

18

இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜெய்சங்கர் இலங்கைக்கு!

கொழும்பு, ஜூன் 16

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் எதிர்வரும் 20ஆம் திகதி இலங்

18

## துணவி வாள்வெட்டு; இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

வட்டுக்கோட்டை – துணவிப் பகுதியில், கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரி

18

## தேர்தல் பரப்புரைக்கு '13' ஐ பயன்படுத்தாதீர்!

### இப்படிக் கேட்கிறார் நாமல்

கொழும்பு, ஜூன் 16

தேர்தல் காலத்தில் பரப்புரை நடவடிக்கைகளுக்காக 13 ஆவது திருத்தத்தைப் பயன்படுத்துவதை அரசியல் கட்சிகள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாள

18

## நாடாளுமன்றத்திலும் '13' அனல் பறக்கும்

கொழும்பு, ஜூன் 16

வடக்கு மற்றும் தெற்கு அரசியல் களங்களில் 13 ஆவது திருத்தம் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விவாதங்கள் பூதாகரமாகலாம் என்று கருதப்படுகின்றது.

18

தமிழகத்தில் நடைமுறையில் இருந்த

## மீன்பிடித் தடைக்காலம் நேற்றுடன் நிறைவு!

### வடக்கு மீனவர்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழகத்தில் கடந்த சிலவாரங்களாக நடைமுறையில் இருந்த மீன்பிடித் தடைக்காலம், நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளது. இதனால், வட

18



## இந்து சகோதரர்கள் போர் சமநிலையில் முடிவடைவு

யாழ்ப்பாணம், ஜூன் 16

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையில் 'இந்து சகோதரர்களின் சமர்' எனும் தொனிப்பொருளில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிந்துள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினமும், நேற்றும் இரு தினங்களாக இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய

18

சஞ்சீவி


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வு வழங்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம்

## தோட்டத்தொழிலாளர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

**அரசாங்கம் அறிவித்த ஆயிரத்து 700 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் நாடு தழுவியரீதியில் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தோட்டத்தொழிலாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளம் வழங்கப்படுமென, மே தினத்தன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்ததுடன் வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டார். தோட்ட முதலாளிமார் சம்மேளனம், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளது. ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்தது.

இதனால், சம்பள நிர்ணயசபை ஏற்பாடு செய்த கலந்துரையாடலிலும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ப-6)

# துப்பாக்கிச்சூடு நாடகம் நடத்திய உத்திக பிரேமரத்ன சிக்கினார்

கொழும்பு, ஜூன் 16

அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார் மீது கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் அவர் மூலமாகவே திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உத்திக பிரேமரத்னவும், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் இணைந்து இந்த தாக்குதலை திட்டமிட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்றும், மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கியை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உத்திக பிரேமரத்ன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகித் தற்போது தனது குடும்பத்துடன் கனடாவுக்குச் சென்றுள்ளார். (எ-இ)

# கெஹலியவின் மறியல் நீடிப்பு



கொழும்பு, ஜூன் 16

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 பேரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசியை இறக்குமதி செய்தமை தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மீண்டும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸாருக்கு இலஞ்சம்; கைதானார் ஒருவர்

குருநாகல், ஜூன் 16

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி, இலஞ்சம் கொடுக்க முற்பட்ட ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் நாகொல்லாகம பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

அம்பகஸ்வெவ பிரதேசத்தைச்சேர்ந்த 23 மற்றும் 28 வயதுடைய இரண்டு பேரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்களை விடுவிக்குமாறு நாகொல்லாகம பொலிஸ் நிலையத்தில் வைத்து 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்க முற்பட்ட போது குறித்த நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ஒ-25-6)

# போதைக்குற்றம்; நாட்டில் குறைகிறது

கொழும்பு, ஜூன் 16

மேல் மற்றும் தென் மாகாணங்களைப் போன்று ஏனைய மாகாணங்களிலும் பரவி வந்த போதைப்பொருள் கடத்தல்கள் தற்போது குறைவடைந்துள்ளன என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின் பின்னரே இந்தக் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன. 'யுக்திய' நடவடிக்கை ஜூலை மாதத்திலிருந்து மிகவும் வித்தியாசமான முறையில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# மாகாணசபைத் தேர்தலை நடத்தியவர் மஹிந்தவே

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 16

தற்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் யார் என்ன கதைத்தாலும் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்திய தலைவர் மஹிந்த ராஜபக்சதான்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஒத்துழைப்பு வழங்கும். கட்சி என்ற வகையில் தேர்தலைப் பிற்போடும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். தற்போது 13 பற்றி பலர் பேசுகின்றனர். ஆயினும் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்திய ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்சதான். அதன்பிறகு வடக்கில் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தலை ஒத்திவைக்க முற்படும் கட்சிகள் காணாமல்போகும் என்பதே வரலாறு என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

# 11 நாள்கள் கடந்தும் நடவடிக்கை இல்லை

## குணதிலக்க ராஜபக்ச எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 16

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேவால் தாக்குதல் நடத்தப்பட்டு 11 நாள்கள் கடந்துள்ளபோதும் எதுவித சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 3ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்திருந்தது.

தன்னால் இன்னமும் நடக்க முடியாதுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரூ. 180 கோடி ஹசிஸ் தமிழகத்தில் பறிமுதல்

## இருவர் கைது

சென்னை, ஜூன் 16

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு 180 கோடி ரூபா பெறுமதியான 75 கிலோ ஹசிஸ் போதைபொருளை கடத்திச்செல்லத் திட்டமிட்டிருந்த இருவர் தமிழ்நாடு வேளாங்கண்ணியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு, அவர்களிமிருந்த போதைப்பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஒ-25-100)

# மயில் வேட்டை; அறுவர் கைது!

கொழும்பு, ஜூன் 16

மாதுரு ஓயா தேசிய வனப்பகுதிக்குள் அத்துமீறி பிரவேசித்து மயிலை வேட்டையாடி சமைத்து உண்ட வெளிநாட்டவர் உட்பட ஆறு பேரைத் கைதுசெய்ய மஹியங்கனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மயிலை வேட்டையாடி சமைத்து உண்ட காணொலியை அடிப்படையாகக் கொண்டு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மயிலை வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழிப்பைக் கட்டுப்படுத்த களமிறக்கப்படும் 'ட்ரோன்கள்'

**முல்லைத்தீவு, ஜூன் 16**

**இலங்கையில் இடம்பெறும் காடழிப்பை கண்காணிப்பதற்கு 'ட்ரோன் கமராக்களை' பயன்படுத்தவுள்ளதாக வனப்பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இந்தச் செயற்பாடு வடக்கில் இரண்டு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.
முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் வனவளத் திணைக்களத்தின் விசேட பயிற்சிபெற்ற அதிகாரிகள் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-19)






## கல்விசாரா ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா , ஜூன் 16

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்துவை, தமக்கு வழங்குவதாக உறுதிப்படுத்திய கொடுப்பனவை வழங்கு, 25 வீத அதிகரிப்பை உடனடியாக வழங்கு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஒ-25-110)

## மாட்டை இறைச்சியாக்கிய மூன்று பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நெடுந்தீவில் மாட்டைக் கொன்று இறைச்சியாக்கிய மூவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தும், கடுமையாக எச்சரித்தும் விடுதலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-
நெடுந்தீவில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் மாடொன்றினை இறைச்சியாக்குவதாக பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 20 கிலோ மாட்டு இறைச்சியுடன் மூவரைக் கைது செய்தனர்.
இதனையடுத்து மூவர் மீதும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்து முற்படுத்திய போது கடுமையான எச்சரிக்கையுடன் 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது . (ஒ-25-125)

## அபிவிருத்திக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், மேலதிக செயலர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேசசபை செயலாளர்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், விடய உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-25-113)

## விவசாயப் போதனாசிரியர்கள் முல்லைத்தீவில் பற்றாக்குறை

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் கீழ் 10 விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக மாவட்ட பிரதி மாகாண விவசாய ப்பணிப்பாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விவசாய செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 32 விவசாய போதனாசிரியர்கள் பிரிவு காணப்படுகின்றன. ஆனால் 22 விவசாய போதனாசிரியர்களே கடமையில் உள்ளனர்.
பெருமளவான விவசாயிகள் வயல் செய்கை மற்றும் மேட்டு நில பயிர்ச்செய்கை சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவ்வாறான விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டு அவற்றுக்கான தீர்வுவழங்க, விவசாயத் திணைக்களம் திணறிவருவதாக, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் யாமினி சுசீந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-19)

## மயக்கமருந்துக்குப் பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு தேசிய மருத்துவமனையில் மயக்க மருந்து பற்றாக்குறையால் சத்திரசிகிச்சைகளை இரத்துச்செய்ய நேரிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை மயக்கமருந்து கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
மருந்துகளை விடுவிப்பதற்கான ஆவணங்களை இறக்குமதியாளர்கள் சமர்ப்பிக்காமையால், மருந்துகளைப் பகிர்ந்தளிப்பதில் தாமதம் நிலவுகிறது என சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவித்தார். (ச-இ)

## சாவகச்சேரியில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

சாவகச்சேரி நகர கிராம அலுவலர் பிரிவின் சுகாதாரத் திணைக்களத்தினர், பிரதேச செயலகத்தினர் மற்றும் சாவகச்சேரி நகரசபையினர் இணைந்து நேற்றுமுன்தினம் டெங்குத் தடுப்புப் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.
குடியிருப்புகள், காணிகள், பாடசாலைகள் கட்டட நிர்மாணத் தளங்கள், வழிபாட்டுத் தலங்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள் உள்ளிட்ட 333 இடங்கள் தரிசிக்கப்பட்டன. அவற்றில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட ஐந்து இடங்களுக்கு துப்புரவு செய்யக் காலக்கெடு வழங்கப்பட்டதுடன் சிவப்பு அறிவித்தலும் ஒட்டப்பட்டது.
இந்தக் கால அவகாசத்தினுள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ச-9)

## பௌத்த சங்க சபை மாநாடு: தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் 20 ஆவது வருட மாநாடு மற்றும் உலக பௌத்த முன்னணியின் 5 ஆவது வருட மாநாடு என்பன தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
யாழ். மாவட்ட மேலதிக செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நயினாதீவு ரஜமகா விகாரை விகாராதிபதி, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி, ஜனாதிபதி செயலகப் பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்ட செயலர், யாழ். மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர், உதவி மாவட்டச் செயலர், பௌத்த கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலணை மற்றும் காரைநகர், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர்கள், வேலணைப் பிரதேசசபையின் செயலாளர், மின்சாரசபை மின் அத்தியட்சகர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்டப் பொறியியலாளர், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி, பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சகளைவிட சிறந்தவர் ரணில்

## அஜித் மானப்பெரும புகழாரம்

**கொழும்பு, ஜூன் 16**

**கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகியோரைவிட ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறப்பாக ஆள்கின்றார் என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

முன்னாள் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் உறவு உள்ளது. அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டுவந்தார். ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை முழுமையாக பாராட்ட முடியாவிட்டாலும் ஓரளவு சிறப்பாக உள்ளது. அடித்தட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியிடம் இருந்து தீர்வு வருவதில்லை.

ஆனால் மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்சவைவிடவும் தற்போதைய ஜனாதிபதி சிறப்பாக செயற்படுகின்றார். அவரின் வேலைத்திட்டங்கள் ஓரளவு சிறப்பாக உள்ளன -என்றார். (ஒ-25-44)






வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 7 ஆம் நாள் கைலைக் காட்சி உற்சவம், கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-66)

# கடற்கரை கபடி சுற்றுப்போட்டி



திருகோணமலை, ஜூன் 16

திருகோணமலையில், கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெற்ற பாடசாலை கபடி அணிகளுக்கிடையிலான முதலாவது தேசியமட்ட கடற்கரை கபடிச் சுற்றுப்போட்டியில், 20 வயதுக்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹாட்லிக் கல்லூரி ஆண்கள் அணி 3 ஆம் இடத்தையும், 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பிரிவில் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடத்திய இப்போட்டிகள், முதல் முறையாக கடற்கரை கபடி போட்டியாக நடைபெற்றன. இப்போட்டிகளில் வடக்கு ,கிழக்கு உட்பட 25 மாவட்டங்களில் 43 ஆண்கள் பாடசாலை கபடி அணிகளும், 30 பெண்கள் பாடசாலை கபடி அணிகளும் பங்குபற்றின. போட்டிகள் 18 வயதுக்குட்பட்ட மற்றும் 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளுக்கு நடத்தப்பட்டன.

இறுதிப்போட்டிகளில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அம்பாறை அல் அஸ்கர் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், மாவனல்லை நிவிசந்த தேசிய பாடசாலை 2 ஆம் இடத்தையும், அம்பாறை அல் மதீனா முஸ்லிம் மகா வித்தியாலயம் 3 ஆம் இடத்தையும், பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை திருகோண மலை கந்தளாவ மகாவித்தியாலயமும், 2 ஆம் இடத்தை காலி ஜின ஆனந்தசார தேசியப் பாடசாலையும் 3 ஆம் இடத்தை திருகோணமலை அக்ரபோதி தேசிய பாடசாலையும் பெற்றன.

20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்பாறை அல்மதீனா முஸ்லிம் மகா வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை வவுனியா பெரக்கும் மத்திய கல்லூரியும் 3 ஆம் இடத்தை யாழ். ஹாட்லிக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் திருகோணமலை அக்ரபோதி தேசிய பாடசாலை முதலாம் இடத்தையும், யாழ். தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியா லயம் 2 ஆம் இடத்தையும், மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ப)

# தென்னாபிரிக்காவை மிரட்டியது நேபாளம்



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில், நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில், தென்னாபிரிக்காவுக்கு தோல்விப் பயத்தைக் காட்டியது நேபாளம். இறுதிப்பந்துவரை சென்ற இந்த ஆட்டத்தில் ஓர் ஓட்டத்தால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. ஹென்றிக்ஸ் 43 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய நேபாளம் அணி ஆட்டத்தை இறுதிப்பந்துவரை கொண்டுவந்தது. அந்த அணி 114 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது. ஷம்ஸி 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஊறணி அந்தோனியார் ஆலயப் பெருந்திருவிழா

கிளிநொச்சி, ஜூன் 16

காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின் நற்கருணைப் பெருவிழாவும் அந்தோனியார் திருச்சொரூபப் பவனியும் கடந்த புதன்கிழமை சிறப்புற நடைபெற்றது.

நற்கருணைத்திருவிழா திருப்பலியை இளவாலை மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்பணி எஸ்.ஜெயக்குமார் அடிகளார் நிறைவேற்றினார். (ச-555)

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட்



இலங்கையில் உள்ள பாரிய வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனம், அனைவருக்கும் ஏற்ற கட்டுப்படியாகும் விலை, நம்பகத்தன்மை மற்றும் சிக்கனம் ஆகிய தனது சின்னங்கள் மூலம் பெரும்பாலானவர்களைச் சென்றடைந்துள்ளது. இந்நிறுவனம் பஜாஜ மற்றும் KTM வாகனங்களுக்கான இலங்கையின் ஏக விநியோகஸ்தராகும். இதற்கு மேலதிகமாக MRF, அட்லஸ் மற்றும் ஓரியன் ஆகிய டயரகளை இலங்கையில் விநியோகிஸ்து வருகின்றது. நாடு முழுவதிலும் வியாபித்துள்ள விற்பனை மற்றும் உதிரிப்பாக டீலர் வலையமைப்பின் ஊடாக இலங்கையின் வாகனத்துறையில் ஒப்பிடமுடியாத தரம் மற்றும் சிறப்பான பெறுமதியை வழங்குவதில் உறுதியாகவுள்ளது.

### விற்பனை மேற்பார்வையாளர் - யாழ்ப்பாணம்

#### பொறுப்புக்கள்

- குறிப்பிட்ட பிரதேசத்தில் விற்பனை இலக்கை அடைதல்.
- கால அட்டவணைக்கு ஏற்ப டீலர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடம் வழமையான விஜயங்களை
- உறுதிப்படுத்தல்.
- டீலர் வலையமைப்பில் ERP கட்டமைப்பின் சீரான இயக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் உறுதி செய்தல்.
- வலையமைப்பு மற்றும் வாடிக்கையாளர் சேவையை நிலைநிறுத்த டீலர் வலையமைப்புக்களுடன் சிறந்த வர்த்தக உறவுகளைப் பேணுதல், அதேநேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு திருப்தியை உறுதிப்படுத்தல்.
- டீலர்களை அதிகரிக்கவும், சந்தைப் பங்கை அதிகரிக்கவும் தேவையான ஊக்குவிப்புப் பிரசாரங்களை திட்டமிடல் மற்றும் ஏற்பாடு செய்தல்.
- தொழில்துறை மற்றும் போட்டியாளர்கள் குறித்த தகவல்களைத் திரட்டுதல், வாய்ப்புக்கள் மற்றும் பலவீனங்களை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்தல்.

#### தகைமைகள

- சந்தைப்படுத்தல் அல்லது வணிக முகாமைத்துவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து இதற்கு சமமான மட்டத்திலான டிப்ளோமா / சான்றிதழ் மட்டத்திலான கல்வித் தகைமை.
- விற்பனை / சந்தைப்படுத்தலில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.
- வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்கள் தொடர்பில் காணப்படும் முன் அனுபவம் கூடுதல் நன்மையாக அமையும்.
- MS Office இல் சிறப்பு.
- ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நன்றாகக் கதைப்பது மற்றும் எழுதுவது உள்ளிட்ட தொடர்பாடல் திறனுடன் கூடிய சிறந்த தனிப்பட்ட திறமை.

எமது எதிர்பார்ப்புக்களைப் பூர்த் திசெய்யக் கூடிய நபர் என நீங்கள் உங்களைக் கருதினால் தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும். இந்த விளம்பரம் வெளியாகி ஏழு (07) நாட்களுக்குள் உங்கள் விண்ணபத்தை அனுப்பிவைக்கவும். தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்கள், உறவினர் அல்லத இரு நபர்களின் சிபாரிசு ஆகியவற்றுடன் விண்ணப பிக்கும் பதவியை கடித உறையின் மேற்பகுதியில் அல்லது மின்னஞ்சலின் பொருள் பகுதியில் குறிப்பிட்டு அனுப்பவும்.

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட்
இல 120, 120ஏ
பன்னிப்பிட்டிய வீதி,
பத்தரமுல்லை

மின்னஞ்சல் : careers@dpmco.com

David Pieris
Group of Companies



## சுவிற்ஸர்லாந்திலிருந்து ஆதிவாசிகளின் எச்சங்கள்

கொழும்பு, ஜூன் 16

சுவிற்ஸர்லாந்திலுள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆதிவாசிகளின் 12 எலும்புக்கூடுகள், 30 மண்டைஓடுகள் மற்றும் 400 கிலோகிராம் எடையுள்ள கலைப்பொருள்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் தம்பன வாரிக மஹ தெரவின் கோரிக்கைக்கமைய சுவிஸ் அரசாங்கத்துடன் இணைந்து மேற்கொண்ட முறையான ஒப்பந்தத்தின் மூலம் இந்தப் பொருள்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கொண்டுவரப்பட்ட பூர்வீக மனித எச்சங்கள் மற்றும் கலைப் பொருள்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தும் நிகழ்வு தாமரைத் தடாகத்தில் இடம்பெற்றது.

இதில் ஆதிவாசிகளின் தலைவர் உருவரிகே வன்னில எத்தோ கலந்துகொண்டார். (ச-இ)

## ஆசிரிய உதவியாளர் விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஜூன் 16

நாட்டின் பெருந்தோட்டப்புற தமிழ்மொழிமூலப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமைகளைக் கொண்ட இருசாராரிமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தின் 'Our Services' இன் கீழ் உள்ள 'Online Applications Recruitment Exams' எனும் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை முறையூடாக மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும்.

விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஜூலை மாதம் 12 திகதி நிறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



யூனியன் வங்கியின் தங்கத் தீர்வு
தொல்லை இல்லை, வரிசை இல்லை
உடனே கையில காசு தான்
அருமையான பரிசுகள்!
தங்கப் பவுணுக்கு அதிக முற்பணம்
ரூ.150,000
(24 கரட்டிற்கு)
குறைந்த நாளாந்த வட்டி
36 சதம்
(ஒவ்வொரு 1,000/- ரூபாவிற்கும்)
www.unionb.com
UNIONBANK

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வடக்கு தடகளப் போட்டியில் மகாஜனக் கல்லூரி சாதனை



யாழ்ப்பாணம், ஜூன் 16

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சேர்ஜோன். ஹாபட் தடகளப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சாதனையீட்டியுள்ளனர்.

இந்தப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் 15 வயது பெண்கள் பிரிவில் உயரம் பாய்தலில் ரி.ஆரதி முதலாமிடத்தையும் தட்டெறிதலில் பி.பிரசாலினி இரண்டாமிடத்தையும் 80 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் ரி. ஆரதி இரண்டாமிடத்தையும் 15 வயது பெண்கள் பிரிவு 4x100 மீற்றர் மற்றும் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் இரண்டாமிடத்தையும் 13 வயது ஆண்கள் பிரிவில் 100 மீற்றரில் கெவின்லீதன் மூன்றாமிடத்தையும் உயரம் பாய்தலில் பிரவீன் இரண்டாமிடத்தையும் 14 வயது ஆண்கள் பிரிவில் 200 மீற்றர் ஓட்டத்தில் கபிஷன் இரண்டாமிடத்தையும் நீளம் பாய்தலில் கிருத்திகன் முதலாமிடத்தையும் 15 வயது ஆண்கள் பிரிவில் 400 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்டத்தில் கவிஷன் இரண்டாமிடத்தையும் பெற்று சாதனையீட்டியுள்ளனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. சிவ வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும்..

**இடபம்:** தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் குறைவாகவே கிடைக்கும். சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மனதில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். செலவு செய்ய நேரிடும். தாயாரின் உடல் ஆரோக்கியத் தில் கவனம் செலுத்தவும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். தொல்லைகள் ஏற்படக்கூடும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சலுகை கிடைக்கும். சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர்ப் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். செலவு செய்யவேண்டி இருக்கும் . பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். விநாயகரை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் அதிகரிக்கும்.



## விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 16

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் நிதியனுசரணையில், 'சிறுவர்களைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வு, ஜே/203 மயிலங்காடு கிராம அலுவலர் பிரிவில், கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், உளவளத் துணை உதவியாளர், கிராம அலுவலர் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில், மயிலங்காடு ஸ்ரீ முருகன் சிறுவர்கழகச் சிறார்கள் கலந்துகொண்டனர். (ப-66)

## சித்திரச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 16

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக, சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால், மேற்படி பாடசாலையில் சித்திரச் செயலமர்வு, கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. செயலமர்வில் சிற்பச் சித்திர வல்லுநர் கலாபூசணம் பத்மநாதன் வளவாளராகக் கலந்துகொண்டார். (ப-66)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.நகரத்தில் இயங்கிவரும் வர்த்தக நிலையங்களின் ஊழியர்களது ஆரோக்கியமான வேலை, ஆரோக்கியமான உணவு, வணிக நிலையங்களில் சுகாதாரத்தைப் பேணுதல், பாதுகாப்பு வணிகத்துடன் தொடர்புடைய குற்றங்கள் மற்றும் மேலதிகமாகத் தேவைப்படும் கழிவகற்றல் முறைமைத் திட்டங்கள், தொடர்பான கலந்துரையாடல் யாழ். வணிகர் கழகப் பணிமனையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பிரதிநிதிகள், யாழ். மாநகரசபையினர், யாழ். வணிகர் கழக நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் யாழ்.நகர வர்த்தகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-25-66)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 16

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் யாழ்.சாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்திய ஆண்டுவிழா, கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ்.சாலை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

சாலை முகாமையாளர் என்.குணசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் பிரதம விருந்தினராகவும், யாழ். பேருந்து நிலைய ஓய்வுநிலைப் பொறுப்பதிகாரி என்.லோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ப-66)





## அந்தோனியார் ஆலயத் திருவிழா!

முல்லைத்தீவு, ஜூன் 16

கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட அளம்பில் அந்தோனியார் ஆலயத் திருவிழா, கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

திருவிழாவில் மறைக்கோட்ட குருக்கள், அருட்தந்தையர்கள், பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரச திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொறுப்புணர்தல் எப்போது?

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், அடுத்தவாரம் இலங்கைக்கு வரவிருக்கின்றார். ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பான பேச்சுகள் தமிழர் தாயகத்தில் முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பின்னணியில், கலாநிதி ஜெய்சங்கரின் வருகை, வர்த்தக மூலோபாயத் திட்டங்களுக்கும், வெளிவிவகாரக் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்ட நோக்கங்களைக்கொண்டது என்றே வெளியுலகுக்குச் சொல்லப்படுகின்றது. ஆனாலும் அதற்குமப்பால் அரசியல் சார்ந்த பல விடயங்கள் இந்த வருகைக்குப் பின்னே ஒளிந்திருப்பதும் உண்மையே. இந்த நிலையில், அவரின் இந்தப் பயணத்தை, அவருடனான பேச்சுகளை தமிழர் தரப்பு எவ்வாறு கைக்கொள்ளப்போகின்றது என்ற கேள்வியும் எழவே செய்கின்றது.

அண்மையில் நடைபெற்ற இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சியமைத்தது. மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பொறுப்பேற்று வரலாற்றில் தன்னைப் பதிவுசெய்தார். ஆனால், மோடியின் அமைச்சரவையில் எந்தப் பெரிதான மாற்றங்களும் நிகழ்ந்ததாக இல்லை. வெளிவிவகாரத்துறை அமைச்சராக ஜெய்சங்கரும், உட்துறை அமைச்சராக அமித் ஷாவும் பதவியில் தொடர்கின்றனர். ஆக, இந்திய அரசாங்கத்தின் முகம் அதன் உள்ளகக் கொள்கைகளிலோ அல்லது வெளியகக் கொள்கைகளிலோ மாறப்போவதில்லை என்பதைத்தான் இந்த நியமனங்கள் கட்டியம் செய்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மிகக் கவனமான அரசியல் நகர்வுகளையும், முடிவுகளையும் எடுக்க வேண்டிய இடமும் இதுவே.

கடந்த மாதம் இதே காலப்பகுதியில்தான், பா.ஜ.க. அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடைகளை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதாக அறிவித்தது. "விடுதலைப் புலிகளின் இயக்கம் தமிழ்நாட்டில் இரகசியமாகச் செயற்படுகிறது, அனைத்துத் தமிழர்களுக்குமான தனிநாடு என்ற கோரிக்கையில் புலிகள் அமைப்புத் தொடர்ந்தும் வலுவாகவே உள்ளது, இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது, மட்டுமல்லாமல், இந்தியாவின் பாதுகாப்புக்கும் அந்த அமைப்பு அச்சுறுத்தலாகவே உள்ளது" என்பனதான் புலிகள் மீதான தடைக்கு இந்தியா கூறும் கற்பிதங்களாக அமைந்திருந்தன. இதே ஜெய்சங்கரின் வெளிவிவகார நகர்வுகளும், அமித் ஷாவின் உள்ளகக் கொள்கைகளும்தான் புலிகள் மீதான தடைக்கு உடலாகவும் உயிராகவும் அமைந்திருந்தன. எனவே இவ்விருவரையும், நமது இனத்தின் பக்கம் கொஞ்சமேனும் பரிவோடு பார்க்கும் நிலைக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்தலைவர்களின் கைகளிலேயே உள்ளது. ஆனால், எம்மவர்களோ உட்கட்சி குடுமிப்பிடி சண்டைகளிலும், பொதுவேட்பாளரை எதிர்த்து கூட்டங்கள் வைத்து பிரசாரம் செய்வதிலும்தான் முனைப்பாக இருக்கிறார்களே தவிர, குறைந்தபட்சம் இந்தியாவையாவது தமிழினத்தின் பக்கம் கொண்டுவர எந்தவித எத்தனங்களையும் செய்யமறுக்கிறார்கள்.

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தத்தை முன்வைத்தது இந்திய அரசாங்கமே. ஆனால், இந்தத் தீர்மானத்தை இன்றளவும் இலங்கை அரசாங்கம் இம்மியும் கண்டுகொண்டதாகவில்லை. பலநூறு தடவைகள் 13 ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்துகின்றபோதிலும் மெத்தனப் போக்கையே கொழும்பு பரிசாக வழங்கி வருகின்றது. இவ்வாறாக ஒரு இருண்மை நிலைக்குள் இருந்தே இந்திய அரசாங்கம் தமிழர் விடயத்தைக் கையாண்டுவருகின்ற பின்னணியில், பா.ஜ.க. அரசாங்கத்தின் இந்த ஆட்சிக் காலத்திலாவது சில விடயங்களில் தீர்க்கம் தேட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கு இருக்கவே செய்கின்றது. இவர்களாவது பொறுப்புணர்வார்களா?






# போர்க்குற்றச் சாட்சியங்கள் மறைமுகமாகச் சேகரிப்பு!

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென வீரசேகர கொதிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

**இராணுவத்தினர் போர்க்குற்றங்கள் இழைத்தனரென குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராகவும், அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்சியங்களைச் சேகரிக்கும் வெளியகப் பொறிமுறையொன்று சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைக்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -
இந்த வெளியகப் பொறிமுறை வெளிவிவகார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளபோதும், இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.
இந்த நடைமுறையானது எமது நாட்டின் இராணுவத்தினரின் சுயமரியாதைக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும்.
இதற்கு எதிராக வெளிவிவகார அமைச்சு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். வலுவான தேசிய பொறிமுறையொன்று காணப்பட்டாலே வெளியகப் பொறிமுறையால் சேகரிக்கப்படும் சாட்சிகளைத் தோற்கடிக்க முடியும் - என்றார். (ச-இ)

## ஓய்வுபெற்ற பொலிஸார் அரசியலில்; முன்னாள் அதிகாரிகள் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 16
முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரத்ன, குற்றப் புலனாய்வுப்பிரிவின் முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபயசேகர ஆகியோர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டமைக்கு ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உட்பட ஓய்வுபெற்ற மூத்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று கண்டனம் தெரிவித்துள்ளது. 150 வருட பழைமை வாய்ந்த பொலிஸ் திணைக்களம் இவர்களின் செயற்பாட்டைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டதாக இதுவரை வரலாறு இல்லை. என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

## பொருளாதாரம் ஏறுமுகம்

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 5.3 வீதமாகக் காட்டப்பட்டுள்ளது.
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சபாநாயகரை சந்தித்த அல்ஜீரியா தூதுவர்

கொழும்பு, ஜூன் 16
இலங்கைக்கான அல்ஜீரியாவின் தூதுவர் அலி செய் மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சந்திப்பில் அல்ஜீரியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் தேயிலை மற்றும் கறுவாப்பட்டை ஊடாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. (ச-இ)

## எனக்குவந்த வாய்ப்பையே மைத்திரிக்கு கொடுத்தேன்

*புதுக்கதை விடும் ராஜித*

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளராக களமிறங்குமாறு எனக்கு கிடைத்த வாய்ப்பையே மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கினேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2015 ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்குமாறு ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கோரினார். தேர்தலில் வெற்றிபெற சுதந்திரக்கட்சியின் வாக்குகள் அவசியம், எனவே, மைத்திரியை களமிறக்குமாறு கோரினேன்- என்றார். (ஒ-44)

**நாளை**

17.06.2024
**திங்கட்கிழமை**
**ஆனி - 03**
சுபநேரம் : 11.53 - 01.23
ராகுகாலம் : 07.23 -08.53

**நாளொரு நல்வார்த்தை**

**எளிமையான வாழ்க்கைக்காகப் பிரார்த்தனை செய்யாதீர்கள், கடினமான வாழ்வை எதிர்கொள்ள பலத்தைக் கேளுங்கள்!**

**- புரூஸ்லீ -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் சாவு

சாவகச்சேரி, ஜூன் 16

தவறான முடிவெடுத்து யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் கச்சாய் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர். (ச-9)



# தந்தை செய்ததையே சஜித்தும் செய்கிறார்!

### குமுறுகிறது பெரமுன

**கொழும்பு, ஜூன் 16**

**புலிகளுக்கு ஆயுதம் மற்றும் பணம் வழங்கி ரணசிங்க பிரேமதாஸ அன்று செய்த தவறின் இரண்டாம் பாகத்தை, 13 பிளஸ் எனக் கூறி அவரின் மகனான சஜித் பிரேமதாஸ இன்று செய்வதற்கு முற்படுகிறார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி விமர்சித்துள்ளது.**

இது தொடர்பில் மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே மேலும் தெரிவிக்கையில்,

புலிகள் அமைப்பால் பொலிஸார் கொலைசெய்யப்பட்ட கொடூரமான நாள் இன்றாகும் (கடந்த திங்கட்கிழமை). அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவால் எடுக்கப்பட்ட சில தவறான முடிவுகளாலேயே இந்த அநியாயம் ஏற்பட்டது.

சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்துக்குச் சென்று , 13 பிளஸ் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதிப் பதவிக்கு வந்திருந்தோர் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலுள்ள பாரதூரத்தன்மையால் அதனை செயற்படுத்தவில்லை.

மாகாணங்களில் பொலிஸ் கட்டமைப்பு உருவாகினால் என்ன நடக்கும்? தேர்தலுக்கு முன்னரே இதனை அவர் கூறியது நன்று. மக்களால் முடிவொன்றை எடுக்கமுடியும்.

மஹிந்த ராஜபக்சவின் புண்ணியத்தால் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனாலும் புலிகள் அமைப்புகள் புலம்பெயர்ந்த பல நாடுகளில் செயற்படுகின்றன.

தேர்தல் நெருங்கும்வேளை அந்தக் குழுக்களுக்கு சஜித் அடிபணிந்துவிட்டார்போலும். எனவே, முக்கியத்துவம்மிக்க நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பிரச்சினை களின் போது சஜித் சிந்தித்துச் செயற்படவேண்டும் - என்றார். (ச-44)

## கிளிநொச்சியில் தையல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தின் கீழ் இயங்கும் பயிற்சி நிலையத்தில் இளைஞர், யுவதிகளுக்கான தையல் பயிற்சிநெறி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரத்தை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 155ஆம் கட்டை ஏ-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கோ அல்லது nysc.kili2013@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம்.

6 மாதங்கள் கொண்டமைந்த இந்தப் பயிற்சிநெறியின் நிறைவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொவிட் 19 தொற்று நோய் மற்றும் மக்களின் சுகாதார உரிமைகள் மீதான பொருளாதார சவால்களின் தாக்கம் என்பவற்றை ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஏ-9 வீதியில் அமைந்துள்ள சர்வோதய நிறுவன மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஒ-25-159)



## சீருடை அறிமுகமும் கீதம் வெளியீடும்

முல்லைத்தீவு, ஜூன் 16

வளரி விளையாட்டு அணிக்கான சீருடை அறிமுகமும், கீதம் வெளியீட்டு நிகழ்வும் முல்லைத்தீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வளரி அணித் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சிறப்பு விருந்தினராக சிவாகம கிரியாதிலகம் வை.கு. ஜெயசுதாக்குருக்கள், கௌரவ விருந்தினர்களாக உளநல ஆலோசகர் வவுனியூர் ரஜீவன், ஈழத்து எழுத்தாளர் அஜந்தினி ரஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25-19)

## தீர்மானங்கள் கிடப்பில்; கூட்டங்களினால் பயனில்லை

### முல்லை. அமைப்புகள் ஆதங்கம்

முல்லைத்தீவு. ஜூன் 16

நிறைவேற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத கூட்டங்களால் பயனில்லை எனப் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இருந்து இன்று வரை துணுக்காய் பிரதேச செயலகத்தில் பல ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட பல தீர்மா னங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான பேருந்துச் சேவைகள் நடத்தப்படவேண்டும் என கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டதையடுத்து, பேருந்து சேவைகள் நடத்தப்படும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. இருப்பினும் துணுக்காயில் இருந்து அம்பலப்பெருமாள்குளம் வழியாக அமதிபுரம், ஆரோக்கியபுரத்துக்கான பேருந்துச் சேவைகள் மற்றும் துணுக்காயில் இருந்து ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், கொக்காவில், கிளிநொச்சி வரையான பேருந்துச் சேவைகள் இன்னமும் பல கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதேபோன்று நீர்ப்பாசன விடயங்களில் அம்பலப்பெருமாள்குளம், மருதங்குளம் போன்றவற்றின் புனரமைப்பு கள் அரைகுறையில் உள்ளன.

- இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் தீர்க்கப்படாத வையாகவே உள்ளன.

அவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாகவுள்ளது. (ஒ-25-13)

# உவராபத்தின் விளிம்பில் கிளிநொச்சி கிராமங்கள்!

தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய இரு கிராமங்கள் உவரடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இந்த உவர்ப்பரம்பலை தடுத்து கிராமங்களைப் பாதுகாப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பல கிராமங்கள் உவர் அடைந்ததன் தொடர்ச்சியாக மண்டைக்கல்லாறு வழியாக வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம் கிராமங்களுக்கு உவர்நீர் புகுந்து வயல் நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

2010 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மண்டைக்கல்லாறு வழியாக வன்னேரிக்குளத்துக்கு வருகின்ற உவர் நீரைத் தடுப்பதற்கு தடுபணை அமையுங்கள் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் வன்னேரிக்கும், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களும் உவராபத்தை எதிர்கொண்டுள்ளன. இதனைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் விவசாயத் தைக் கைவிட்டு இங்குள்ள ஆயிரம் வரையான குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும் - என்றனர். (ச-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உள்ளக வீதி புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூன் 16

பளை மருத்துவமனையின் உள்ளக வீதி புனரமைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சிமாவட்டஅபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-159)

## அறிமுகப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.மாவட்டத்துக்குப் புதிதாகச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 65 கிராம அலுவலர்களுக்கான அறிமுகப் பயிற்சி வகுப்பு, உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி தலைமையில் யாழ்.மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-66)


## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 10 . 1938

மறைவு 14 . 06 . 2024

### தியாகராஜா நேசநாதன்

(Retaired National Livestock Development Board - Project Officer)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தியாகராஜா நேசநாதன் நேற்றுமுன்தினம் (14.06.2024) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் - பாலாம்பிகை தம்பதியரின் அருமை மருமகனும், ஜெயலட்சுமியின் பாசமிகு கணவரும், ஷர்மிளா (ஜேர்மனி), ஷிறோமி (உதவி முகாமையாளர், கொமர்ஷல் வங்கி ஸ்டான்லி வீதி கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலேஸ்வரன் (ஜேர்மனி), கஜன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, யோகநாதன் மற்றும் தில்லைநாதன் (வவுனியா), ஜெகநாதன் (அவுஸ்ரேலியா), சந்திரேஸ்வரி (அவுஸ்ரேலியா), லிங்கேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கமலேஸ்வரன் (அவுஸ்ரேலியா), விக்கினராஜா (கொழும்பு), Dr. சுலோஜனா (நியூசிலாந்து) மற்றும காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

392/2, நாவலர் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 7905

(cs 55391) (N-1)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வேலையாட்கள் தேவை

கடையொன்றிற்கு
**வேலையாட்கள் தேவை.**
**ஆண், பெண் இருபாலாரும்**
விண்ணப்பிக்கலாம்.
25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்.
தொடர்புகளுக்கு
**078 924 6276**

(CS/55357) J-1

## வேலைக்கு ஆட்கள் தேவை

சாவகச்சேரி நகரில்
அமைந்துள்ள
வைத்திய நிலையத்திற்கு
**பெண் பணியாளர்கள்**
**தேவை.**(வயது 18 - 22)
**T.P.077 918 5730**

(CS/743) J-1

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/55336) J-1

## பணியாளர்கள் தேவை

அல்ட்ரா கிளீன் பிரைவேட் லிமிடெட்
(Ultrakleen (Pvt) Ltd) நிறுவனம்
ஒன்றிற்காக தூய்மைப் பணியாளர்கள்
(Janitors) தேவை. ஆண்/பெண்.

- வேலை நேரம் திங்கள்- சனி - 7.00 am- 4.00pm.
- நாள் சம்பளம் - 1400/-.
- மாத சம்பளம் - 36400/-.
- EPF & ETF வழங்கப்படும்.

தொடர்பு:- **077 301 2765**

(CS/55382) J-1

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 04 . 1959

மறைவு 25 . 01 . 2016

### அமரர் நற்குணராசா சாந்தகுமாரி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
எட்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கரம்பக்குறிச்சி மேற்கு, வரணி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 11 . 2001

மறைவு 16 . 06 . 2023

### அமரர் நற்குணராசா குகதீஸ்

(பேராதனைப் பல்கலைக்கழகம், பொறியியல் பீடம்)

ஆண்டொன்று போனதுவோ
மீண்டுவரமுடியாது ஆழ்கின்றோம் துயரினிலே
பெற்ற தாயினை இழந்து நின்ற போதினிலுமே
கற்ற கல்வியினால் அவர்தம் தாகம்
தணிவித்தாய் என்றிருந்தோம்.
வரணி மண்ணிற்கோர்
சரித்திரம் பொறித்தது உன் சாதனை
பொறியியல் துறையில் பேராதனையில்

பேர் படைப்பாய் என்றிருந்தோம்
பட்டம் பதவி பெற்று பார்போற்ற
உன்வாழ்வு அசையும் என்று கனவு கண்டோம்.
கனவெல்லாம் பொய்யாய்ப் போனதே
உன் மெய் பொய்யாயிற்றே குகதீஸ்
அன்னையின் அணைப்பை நாடிச்
சென்றாயோ விண்ணகம்
இனி எங்கு காண்போம் உன்னை யாம்.

குடும்பத்தினர்.

A-(CS 55376) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 16

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நயினாதீவு சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கிடையிலான 57 ஆவது சமய பாடப் பரீட்சைப் போட்டிகள் நயினாதீவு மகா வித்தியாலயப் பரீட்சை மண்டபத்தில்இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

(ஒ-2566)

## திருமஞ்சம்

யாழ்., ஜூன் 16

சண்டிலிப்பாய் கல்வளை பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதன் 7ஆம் நாள் பக்தி முக்தி பாவனோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை இடம்பெற்று மாலை 7.30 மணிக்கு திருமஞ்சம் ஏறும் கல்வளையன் வெளி வீதி உலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார்.

(ஒ-25)

## கைவிடப்பட்டது ஆட்டம்!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில், இந்தியா - கனடா அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெறவிருந்த ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது. இதையடுத்து இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிரப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் இருந்து இந்தியா, அமெரிக்கா அணிகள் சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)


### காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்**
அந்தோனியார் கோவிலில் இருந்து
350m தூரத்தில்
**3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)
(CS/55370) J-1
தொடர்பு:- 077 614 6434

### கூரை வேலை

நவீன கூரை அல்லது சீலிங்
வேலை நியாய
கூலிச் செலவில் பொருட்களுடனோ.
பொருட்களின்றியோ
செய்து தரப்படும் (CS/55364) J-1
தொடர்பு:- 076 054 1682

### விசா ஆலோசனை சேவை

**பின்வரும் சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

- **விசிட் விசா**
  **கனடா, நியூஸ்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, லண்டன்.**
- **செங்கன் விசா**
- **வேலை விசாக்களுக்கான ஆலோசனைகள்**
  **இத்தாலி, கனடா, போலந்து, லண்டன், நியூஸ்லாந்து.**
- **நிராகரிக்கப்பட்ட விசாக்கள்**
- **விசாக்களுக்கான Document, பொன்சர் சிப் கடிதங்கள்**
- **வங்கி உத்தரவாதம்**
- **சகல சட்டரீதியான வெளிநாடு செல்வதற்கான ஆலோசனைகள்**

தொடர்புகளுக்கு
(CS/28415) J-1
077 604 0373, +44 746 072 0270

### காணி குத்தகைக்குத் தேவை

இராஜவீதி, இருபாலை டச்சுவீதி, கைதடி மானிப்பாய் வீதி, நீர்வேலி, ஊரெழு, புருத்தித்துறை வீதி, கோப்பாய், கரந்தன், அச்செழு ஆகிய இடங்களில் காணி வாடகைக்குத்தேவை.
(CS/55395) N-1
தொடர்பு:- 077 457 0267

### பணியாளர் தேவை

சுத்திகரிப்பு பணியை அலுவலகங்களில்
மேற்கொள்வதற்கு
**பணியாளர்கள் தேவை. ஆண்/பெண்**
இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
யாழ் மாநகர சபைக்குட்பட்டோர்
விரும்பத்தக்கது. வயதெல்லை 21 - 45
(CS/55387) J-1
077 903 7288, 077 497 5962

### வாடகைக்கு உண்டு

செங்குந்தா பாடசாலைக்கு
அருகில்
செங்குந்தா வீதியில்
**வீடு வாடகைக்கு உண்டு.**
(CS/55375) J-1
076 148 1075, 077 864 5502

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில்
3 அறைகளைக் கொண்ட
சகல வசதிகளையும் உடைய
**வீடு விற்பனைக்கு உண்டு.**
**விலை 39 மில்லியன்**
(விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
(CS/55373) J-1
தொடர்பு:- 077 247 4740

### விற்பனைக்கு

HONDA சுப்பர்கப் 50
ஜப்பான் மோட்டார்
சைக்கிள் விற்பனைக்கு.
நல்ல நிலையில் உள்ளது.
(CS/55392) J-1
தொடர்பு:- 077 656 6508

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் வியாபார நிலையத்திற்கு
**ஆண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.**
**(கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது)**
வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு உணவு மற்றும்
தங்குமிட வசதி செய்து தரப்படும்.
(CS/55342) J-1
தொடர்பு :- 076 915 8453

### புனித இசிதோர் முன்பள்ளி ஏழாலை

**முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடம்**

**எமது முன்பள்ளிக்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பயிலுநர் தேவை தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.**

**தகைமைகள்:**

- உயர்தரம் சித்தியடைந்திருக்கவேண்டும்.
- முன்பள்ளிக்குரிய டிப்ளோமா கல்வியை பூர்த்திசெய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கணினியறிவும் ஆங்கிலத்தில் சித்தியும் அடைந்திருக்கவேண்டும்.
- பாடவிதான செயற்பாடுகளில் சிறப்புத்தேர்ச்சி இருக்கவேண்டும்.
- சமூக நலச்செயற்பாடுகளில் அக்கறையிருக்கவேண்டும்.

#. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

சுயவிபரக்கோவையை நேர்முகத்தேர்வுக்கு முன்னர் முன்பள்ளியில் கையளிக்கவும் அல்லது பதிவுத்தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

stisidorechurch@gmail.com

முகாமைத்துவக்குழுவின் நேர்முகத்தேர்வுக்குழுவின் முடிவிற்கமைய ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

மேலதிக தொடர்புக்கு -
0777447222 / 0774109151

**நேர்முகத்தேர்வு இடம்பெறும்**
- **திகதி - 21-06.2024**
- **நேரம் - காலை 9.00 மணி**
- **இடம் - புனித இசிதோர் முன்பள்ளி**

(cs.55396) (N-1)
முகாமைத்துவக்குழு

*We, the Principal, Staff & Students*
*of*
*St. John's College, Jaffna,*
*cordially invite*
*the Parents, Old Boys and well-wishers*
*to*
*The Annual Prize Giving*
*to be held on*
*Saturday, 22nd June 2024, at 9.00 a.m*
*in the*
*Jubilee Hall.*
*We are honoured to have*
*Professor Nishan Canagarajah,*
*President and Vice-Chancellor of the*
*University of Leicester, U.K.,*
*accompanied by*
*Mrs. Thabithal Canagarajah,*
*as our Chief Guest.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலய

# கைலாய வாகனத்திருவிழா

## நாளை (17.06.2024) திங்கட்கிழமை

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பெருந்திருவிழா வரிசையில்

**கைலாய வாகனத்திருவிழா**

நாளை (17.06.2024) திங்கட்கிழமை வெகு சிறப்பாக இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளது

## திருவிழாவின் போது விசேட நிகழ்வாக

ஈழத்தின் மற்றும் தமிழ்நாட்டின் புகழ்பூத்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின்
நாத இசைச் சங்கமம் இடம்பெறும்







## நாத இசைச் சங்கமம்

### ஆஸ்தானவித்துவான் சிவதாஸ் குழுவினர்

### நாதஸ்வரம்

- அகில உலக நாதஸ்வர சக்கரவர்த்தி,நாதஸ்வர இசை அருவி கலாபூசணம் கோண்டாவில் **V.K. பஞ்சமூர்த்தி**
- நாதஸ்வர ஜனரஞ்சக வேந்தன், நாதஸ்வர இளவரசன் நாதஸ்வர கலாநிதி கோண்டாவில **V.K.P. குமரன்**
- நாதஸ்வர இசைஞான கானவாருதி, இசைஞான திலகம் **S. ஆரூரன்**

### தவில்

- இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் தவில் நாத சிகரம், தவில் இசைச் செல்வம், தவில் இசை மாமுரசு தவில் சக்கரவர்த்தி கலைமாமணி கோவிலூர் **K.G. கலியாணசுந்தரம்**
- இந்தியா கேரளாவில் இருந்து வருகை தந்திருக்கும் தவில் இசைத்திலகம், தவில் நாத சுடராளி, தவில்நாத செஞ்சொற் செல்வர் **B. ஸ்ரீகுமார்**
- தவில்ஞான இளவரசன், லய ஞான இசைமணி தவில் கலாரெத்தினா உடுப்பிட்டி **MS. துளசிபரன்**
- மறைந்தும் மறையாத அகில உலக தவில் மாமேதை இணுவை NR சின்னராசாவின் புதல்வர் அகில உலக தவில் சக்கரவர்த்தி, லய பேத விவகார சிரோன்மணி இணுவையூர் NRS சுதாகரன் குழுவினர்



## கைலாயவாகனத் திருவிழா உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட
கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை
**29 JUNE 2024**
(10:00AM TO 11:00AM)

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI

Call us now:
077 147 1471

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சிறுவர்களுக்கான கதைகூறல், நாட்டார்பாடல், கையெழுத்துப்போட்டி என்பன நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

(ம-9)

# மருத்துவமனைக்குள் தாக்குதல்; கைதானோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு, பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி பார்வையாளர் நேரத்தில், மருத்துவமனைக்குள் புகுந்த நபர்கள் தாதியர், காவலாளி உட்பட சிலர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

குறித்த சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்தும், இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், குறித்த அடாவடியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய வலியுறுத்தியும் பருத்தித்துறை மருத்துவமனை சமூகத்தினரால் கடந்த 10ஆம் திகதி கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை பருத்தித்துறை பொலிஸார் கைதுசெய்து நேற்றுச் சனிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர். இதையடுத்து குறித்த மூவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ம-100)

## வீடு வாடகைக்கு உண்டு

சேர்ந்து இருக்கும் மாணவர்களுக்கு ஏற்ற சிறிய வீடு வாடகைக்கு உண்டு 4ம் ஒழுங்கை பிறவுண் வீதி

தொடர்பு: 077 772 2215

## வேலைவாய்ப்பு

கொட்டிக்காவத்தையில் அமைந்துள்ள Asian Group தொழிற்சாலையில் மெலமயின் (Melamine) MDF Board வேலை தெரிந்த திறமையான தச்சர்கள் நிரந்தரமாக வேலைக்குத் தேவை. உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் - 75,000/-

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

076 629 6113

(CS/4659) J-1

## மரப்பலகை மற்றும் இரும்புப் பொருள் ஏல விற்பனை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலுள்ள அரியப்பட்ட மகோகனி மற்றும் ஏனைய மரப்பலகைகள், இரும்புப் பொருட்கள் 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளன. இப்பொருட்களை 21.06.2024, 22.06.2024 ஆகிய தினங்களில் பார்வையிடமுடியும்.

மருதடி விநாயகர் ஆலயம்
மானிப்பாய்.
தொ.பே.இல : 021 225 5117

து.பிரதீபன்
செயலாளர்,
தர்மகர்த்தாசபை

## மரண அறிவித்தல்



மலர்வு 03 . 10 . 1930

உதிர்வு 14 . 06 . 2024

### சிவபாதசுந்தரம் சிவபாக்கியம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் சிவபாக்கியம் நேற்று முன்தினம் (14.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், சதானந்தன் (அவுஸ்ரேலியா), யோகானந்தன் (மலேசியா), ஜமுனாராணி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இலங்கையர் கண்டி (அவுஸ்ரேலியா), இராசையா (கைதடி), சிவமணிதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் சி.செ.இராசையா
கைதடி வடக்கு. (CS/55409) J-1 தொ.இ - 021 205 7229

பிரித்தானியாவில்

# அநுரவுக்கு வரவேற்பு!

லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்காவுக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. லண்டனில், இடம்பெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, அநுரகுமார கடந்த வியாழக்கிழமை பிற்பகல் லண்டனைச் சென்றடைந்துள்ளார். இதன்போது, அவரது ஆதரவாளர்கள் விமான நிலையத்தில் ஒன்றுகூடி வரவேற்பை வழங்கி அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

(ம-100)

## வீடு வாடகைக்கு தேவை

சகல நவீன வசதிகளுடன் தனி நுழைவாயில் கொண்ட மேல்மாடிவீடு மட்டும், யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் தேவை.

தொடர்பு: 076 520 1278

(CS 748) V-1

www.EQMarriageService.com
ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka, Pvt Ltd, Colombo - 04
CALL076 664 9401

### மணமகன் தேவை

| | |
|---|---|
| 1985, இந்து, அவிட்டம் பட்டதாரி NURSE, FRANCE சொந்த இடம் : புங்குடுதீவு மணமகள் பதிவு இல. 10640 | 1995, இந்து, மிருகசீரிடம் பட்டதாரி TEACHER சொந்த இடம் : திருகோணமலை மணமகள் பதிவு இல. 8249 |
| 1993, இந்து, ஸ்வாதி பட்டதாரி DOCTOR சொந்த இடம் : கரவெட்டி மணமகள் பதிவு இல. 8155 | 1991, இந்து, திருவோணம் பட்டதாரி MANAGER, GERMANY சொந்த இடம் : சுன்னாகம் மணமகள் பதிவு இல. 10553 |

### மணமகள் தேவை

| | |
|---|---|
| 1993, இந்து, திருவாதிரை பட்டதாரி I.T OFFICER,AUSTRALIA சொந்த இடம் : புலோலி மணமகன் பதிவு இல. 10686 | 1985, இந்து, பூரட்டாதி பட்டதாரி DOCTOR சொந்த இடம் : யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல. 5899 |
| 1990, இந்து, அஸ்வினி பட்டதாரி TEACHER சொந்த இடம் : யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல. 8288 | 1981, கத்தோலிக்கம், உத்தராடம் பட்டதாரி CIVIL ENGINEER, U.K சொந்த இடம் : மன்னார் மணமகன் பதிவு இல. 10414 |

பதிவுக் கட்டணம் மட்டுமே
பதிவுக்கு: www.EQMarriageService.com / create - profile

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 06 . 1962

மறைவு 14 . 06 . 2024

### புனிதவதி இரங்கநாதன்

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புனிதவதி இரங்கநாதன் நேற்று முன்தினம் (14.06.2024) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரங்கநாதனின் அன்பு மனைவியும், சஞ்சயன், சஞ்சிதா, (ATI தெஹிவளை), சஞ்சீவன் (தாதியியல், யாழ் பல்கலைக்கழகம்), ஆகியோரின் அன்புத்தாயாரும், செந்தில்நாதன், ஞானசபேசன், சிற்சபேசன், சிறிதரன் (லண்டன்), கெங்காதரன் (நோர்வே), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 749) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரச் சீர்கேடு:

## 22 உணவகங்களுக்கு 1,81,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 16

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 22 உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் காலாவதியான உணவுப்பொருள்கள், பழுதடைந்த உணவுப் பொருள்கள் விற்பனை, உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை எடுக்கப்பட்டபோது உணவக உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 81 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ச-555)

## மன்னாரில் மூவருக்கு குளவிக்கொட்டு

மன்னார், ஜூன் 16

மன்னார் பாப்பாமோட்டையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக பாதிப்புக்குள்ளாகிய குடும்பத் தலைவர் தெரிவிக்கையில்,

சம்பவம் நடந்த அன்று மாலை 4 மணிக்கு வீட்டு முற்றத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த வேளை பெருந்தொகையான குளவிகள் வருவதைக் கண்டதும் எனது மகன் பக்கத்திலுள்ள குளத்துக்கு ஓடிச்சென்று தலை மட்டும் தண்ணீருக்கு மேலே இருக்குமாறு குளத்தினுள் மூழ்கி இருந்தார். இருப்பினும் மகனின் தலைமேல் பெருந்தொகையான குளவிகள் கொட்டத்தொடங்கின. அவரை குளவிக் கொட்டிலிருந்து காப்பாற்ற முயன்றேன். அந்த நேரத்தில் எனது மனைவியும் அங்கு வந்தார். இதன்போது நாங்கள் மூவரும் குளவிக்கொட்டுக்கு இலக்கானோம்.

பாப்பாமோட்டைப் பகுதியில் உள்ள ஆலமரமொன்றில் நீண்டகாலமாக குளவிக்கூடு இருந்து வருகிறது. அடிக்கடி பலர் இந்தக் குளவிகளால் பாதிப்படைந்து வருகின்றனர். இது தொடர்பாக அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை-என்றார். (ஓ-25-60)

# இனப்பிரச்சினைக்கு 13 ஆம் திருத்தம் தீர்வல்ல

ஜே.வி.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

**தேசிய இனப்பிரச்சினைக்கு மாகாணசபை முறைமைதான் சிறந்த தீர்வெனில் இந்நாட்டில் போர் மூண்டிருக்காது. இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச்சட்டம் தீர்வல்ல. எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு ஊடாக தீர்வு முன்வைக்கப்படும். அதுதொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படும்.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

13 ஆவது திருத்தச்சட்டம் மூலம் மாகாண அபிவிருத்தியும் நடக்காது. இதுதொடர்பான எமது நிலைப்பாடு இன்னும் மாறவில்லை. மாகாணசபை முறைமை சிறந்த தீர்வு எனில் இந்நாட்டில் 30 வருடகாலப் போர் ஏற்பட்டிருக்காது. எனினும், எமது நாட்டின் அரசமைப்பின் ஓர் அங்கமாக 13 ஆவது திருத்தச்சட்டம் உள்ளது. மாகாணசபை முறைமை தற்போதும் செயற்படுகின்றது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மட்டும் தான் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எமது ஆட்சியில் புதிய அரசமைப்பு இயற்றப்படும்வரை தற்போதுள்ளவாறு மாகாணசபை முறைமை செயற்படும். அனைத்துக் கட்சிகள் மற்றும் அமைப்புகளுடனும் இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாகப் பேச்சு நடத்தி இணக்கப்பாடு எட்டப்படும்.

அதன்பின்னர் மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும். அதன்மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி அமைக்கப்படும் - என்றார். (ஓ-25-44)

## சர்வஜன அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம்

கொழும்பு,ஜூன் 16

சர்வஜன அதிகாரம் எனும் அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம் நுகேகொடையில் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின்போது மேலும் சில தேசியவாத அமைப்புகளும், கட்சிகளும் மேற்படி கூட்டணியுடன் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வஜன அதிகாரத்தின் நிலைப்பாடும் இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, தொழில் அதிபர் திலித் ஜயவீர உள்ளிட்டவர்கள் மற்றும் வியத்கமவில் இருந்த கோத்தாபய ராஜபக்சவின் உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். சிங்கள தேசியவாத அமைப்புகளும் இணைந்துள்ளன. 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், மஹிந்தவின் எழுச்சிப் பயணம் நுகேகொடையில் இருந்தே ஆரம்பமானது. 'மஹிந்த சூறாவளி' எனும் தொனிப்பொருளின்கீழ் முதலாவது மக்கள் கூட்டம் மஹிந்த தலைமையில் நுகேகொடையில் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (ஓ-25-44)

## பசுக்களை மீட்டவருக்கு சிவசேனை பாராட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 16

கடத்தப்பட்ட பசுக்களைக் காப்பாற்றிய சாவகச்சேரிப் பொலிஸாரின் துணிச்சலான செயலைப் பாராட்டி. இலங்கை சிவசேனை அமைப்பினர்,கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கௌரவித்தனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பகுதியிலுள்ள வளர்ப்பு மாடுகள் கடத்தப்பட்டதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பருத்தித்துறை, துன்னாலைப் பகுதியில் நீண்டகாலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார், இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளையும் உயிருடன் மீட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரையும் கைதுசெய்தனர். இந்தச் செயலைப் பாராட்டி குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கௌரவிக்கப்பட்டார். (ப-66)



## சின்னம் சூட்டும்விழா

குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும்விழா அதிபர் ப.பாஸ்கரன் தலைமையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கணபதி அறக்கொடை நிதியத்தின் நிறுவுநர் க.ஸ்ரீகாந்தன் கலந்துகொண்டார். (ஓ-25)

# காணியற்ற விவசாயிகளுக்கு காணி உறுதி வழங்குங்கள்

ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

மன்னார், ஜூன் 16

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் கடந்த 30 ஆண்டுகளாக காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு இதுவரை காணிக்குரிய ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே மன்னார் மாவட்டத்துக்கு வருகை தரும் முன்னதாக விவசாயிகளுக்கான காணிகளை வழங்கும் உத்தரவை உரிய அதிகாரிகளுக்குப் பிறப்பித்துவிட்டு வருகை தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணிப் பிரச்சினை பற்றி நான்கு ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. காணி வழங்குவதில் எந்தவிதமான சட்ட ரீதியான தடைகளும் இல்லை. குறிப்பாக வனத்திணைக்களத்தினதோ, வனவிலங்குகள் திணைக்களத்தினதோ அல்லது தொல்பொருள் திணைக்களத்தினதோ இல்லை. அலுவலக நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக சகல ஆவணங்களும் பல வருடங்களுக்கு முன்பே காணிச் சீர்திருத்த அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம்- என்றுள்ளது. (ஓ-25,59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா தின நிகழ்வு

கொழும்பு, ஜூன் 16

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, இந்திய தூதரகத்துடன் கொழும்பு விவேகானந்த கலாசார நிலையம் இணைந்து ஏற்பாடு செய்த, பாடசாலைகளுக்கிடையிலான 10 நாள் யோகாசன நிகழ்வு, கொழும்பு அருங்காட்சியகத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

(ப-6)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இராமகிருஸ்ண பாடசாலைக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 703 7058, 077 601 1135

## பணிப்பெண் தேவை

இணுவில் பகுதியில் தங்கி நின்று பராமரிப்பு செய்ய **பெண் பராமரிப்பாளர் தேவை.**

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

T.P. 077 044 0155

(CS/751) J-1

## வீடு விற்பனைக்கு

கொழும்பு, மொறட்டுவ பகுதியில் இருக்கும் சொய்சாபுர தொடர் அடுக்குமாடியில் C Block ல் இரண்டு அறையுடன் கூடிய **வீடு விற்பனைக்கு உள்ளது.** மாபிள் பதித்து முழு வீடும் திருத்தப்பட்டுள்ளது.

விலை - 15,000,000/=

தொடர்புகளுக்கு:-

+9476 230 6450

Email: mpact.uk@gmail.com

(CS/28601) J-1

## A/L பரீட்சை முடிவுகள் வெளியாகின...

குறைந்த கட்டணங்களில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பகுதிநேர வேலை வாய்ப்புகளுடன் உயர் கல்வி

**IELTS அவசியமில்லாத தெரிவுகள்**

DENMARK - Doctors/Nurses உடனடி வேலைவாய்ப்புகள்
AUSTRALIA - வேலைவாய்ப்புகள்
CANADA - நிரந்தர விசா

UNICORN FACILITATORS (PVT) LTD.

439, Temple Road, Nallur.

info@unicornmigrate.com
spraj54@gmail.com

Tel: 077 345 0738 / 0777687821


# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1971



மறைவு 14 . 06 . 2024

## சிவபாதசுந்தரமூர்த்தி வீரமார்த்தாண்டமூர்த்தி (பாரதி)

மாவிட்டபுரம் வீமன் காமத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரமூர்த்தி - வீரமார்த்தாண்டமூர்த்தி (பாரதி) நேற்று முன்தினம் (14.06.2024) வெள்ளிக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரமூர்த்தி - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் விக்கினேஸ்வரன் - ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வித்தியமாலாவின் அன்புக் கணவரும், திமித்தி விதுஷ், ஜேசுவா தினேஸ், டெபோரா சகானா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரிமனோகரி (ஓய்வு நிலை ஆசிரியர் வயாவிளான் மத்தியகல்லூரி) வசந்தகௌரி (ஓய்வு நிலை ஆசிரியர் ஏழாலை மகாவித்தியாலயம்) சிவானந்தகௌரி (நெதர்லாண்ட்) சிவனேசகௌரி (கனடா) சிவபாலகௌரி (லண்டன்), சிவஞானகௌரி (ஜேர்மனி) இராஜமார்த்தாண்ட மூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஞானபாஸ்கரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறீதரன், விக்கினேஸ்வரன் (ஓய்வுநிலை பிரதி அதிபர் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்), செல்வகுமார், குகனேசன், ரதிகரன், சந்திரதாஸ், ஜெயசுதா, இதயசோபனா - குகனேசன், யதுநந்தினி - அகிலன், சத்தியகலா - பரத், ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சரண்யன் - பிருந்தினி, தனஞ்சயன் - பானுமதி, காருண்யன், ரிஷிகேசன் - தீபிகா, மதுராங்கன், செல்வா, அருந்தா, பிரியா - விக்னேஸ், ரவீஸ், ரதிந்தா, சஞ்சிகா, சஞ்சிதன், சுபாஜிகா, ஆகியோரின் அன்பு மாமனாரும், அகல்யா, அபினயா, அக்சயா, அனுசியா, அபிசன், ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சஞ்சுகன், ஸ்ரீவர்ணி, பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| | கௌரிமனோகரி (சுதா) | : 021 223 0588 |
| உரும்பிராய் கிழக்கு, | வசந்தகௌரி (சுபத்திரா) | : 021 223 0497 |
| உரும்பிராய். | ஸ்ரீதரன் (ரஞ்சன்) | : 077 711 0186 |


## கார் திறப்பு தவறிவிட்டது

கைதடி வடக்கு கைதடிச் சந்திக்கும் - நுணாவில் சந்திக்கும் ஊடாக வேம்பிராய் சந்திக்கு இடையில் எனது கார்த்திறப்பு (Remote Key) தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் இலக்கங்களுக்கு அறியத்தரவும்.

077 9155 208, 021 223 1571

(CS 42660) A-1

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவுசெய்யப்பட்டு, மிகத்துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(Bcas கம்பஸ் இற்கு பக்கத்து லேன்)

021 222 9306, 077 138 7596, 071 999 9306

## வோசிங் மெசின் விற்பனைக்கு

சில மாதங்கள் மட்டுமே பாவித்த LG வோசிங் மெசின் உடன் விற்பனைக்கு உண்டு.

இல. 45.
சிவகுருநாதர் லேன், நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தொ.இல.: 074 290 3401


# காணவில்லை



## வைத்திலிங்கம் கனகலிங்கம்

**எனும் 82 வயதுடைய, காலில் காய முள்ள, அதிகம் நடக்க முடியாத வயோதிபர் 12.05.2024 அன்று புங்குடுதீவு மடத்துவெளியில் உள்ள தனது வீட்டின் முன் காணாமல் போயுள்ளார். (G.S பிரிவு J/23) மூப்பின் காரணமாக உள்ள ஞாபகமறதியால் வீடு திரும்ப முடியாமல் அவதிப்படும் நிலையில் இருக்கலாம். வயதின் காரணமாக இவரால் தனிப்பட செயற்பட முடியாது. தயவு செய்து இவரைக் காண்பவர்கள் இவரைப் பற்றிய தகவலை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும்.**

**(கடந்த ஒரு மாத காலமாக கானவில்லை)**

**நன்றி**

076 3365 770, 074 090 9597, 071 999 9306
077 888 8603, 076 834 0781

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவாதப் போட்டி

மன்னார், ஜூன் 16

யு.எஸ்.எயிட். இன் அனுசரணையுடன் வெள்ளம் மற்றும் வறட்சி ஏற்படும் பிரதேச மக்களுக்கு 'சுத்தமான குடிதண்ணீ ரைப் பெற்றுக் கொடுத்தல்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே மழைநீர் சேகரிப்பின் முக்கி யத்துவத்தை அறிவூட்டும் முகமாக மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட 12 பாடசாலைகளுக்கு இடையிலான முதலாம் சுற்று விவாதப்போட்டி முருங்கனில் அமைந்துள்ள ஆசிரியர் வாண்மை விருத்திநிலையத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கை மழைநீர் சேகரிப்பு ஒன்றிய உத்தியோகத்தர்கள், வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(ஒ-25-56)


## கல்வி

தரம் 6 - 11 வரை விஞ்ஞானம், கணித பாடங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

T.P. NO : 077639 1935

## காணி விற்பனைக்கு

நல்லூர் நாயன்மார் வீதியில் 4 1/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு. மேலதிக விபரத்திற்கு கீழுள்ள எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

தர்ஷான் (CS 55405) V-1

077 283 0333

## மணமகள் தேவை

1985 சதயம், கும்பராசி 10 இல் செவ்வாய், கி.பா 25. உயரம்: 168 CM, அரச உத்தியோகத்தர் (கௌரவகுலம்)

தராதரம் : B.Sc, Audio Engineering
Dip. in. media studies
M.A. (Philosophy)
M.A. (Cultural Studies)

எதிர்பார்ப்பு : வீடு/ காணி

(CS 692) J-1

தொடர்பு:- 021 222 8212

## விற்பனைக்கு

- ஊரெழுவில் 12 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.
- யாழ் வைத்தியசாலை மற்றும் BCAS Campus இற்கு அண்மையாக 1 பரப்புக் காணி விற்பனைக்கு.
- கல்வியங்காடு பாரதி வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.
- அராலி முருகமூர்த்தி பாடசாலைக்கு அண்மையாக 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.
- உரும்பிராய் சந்திக்கு அண்மையாக வீதியோரமாக 7 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.

(CS/55632) J-1

Contact Number:- Divakar Thavavinayakan +94 77 221 6683

## வேலையாட்கள் தேவை

சுப்பசூஸ் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு **விற்பனை உதவியாளர்கள் தேவை.**
விண்ணப்பிக்க விரும்பியவர்கள் சுயவிபரக் கோவையை 30.06.2024 இற்கு முன்னர் தபால் மூலம் மட்டும் அனுப்பி வைக்கவும்.

(CS/55393) J-1


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### சின்னத்தம்பி ஜெயரூபன்

(பிரதி அதிபர் யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (18.06.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்திற்கு அருகாமையிலுள்ள "ஜொலி" (Jolee) மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் இறைவனின் பாதாரவிந்தமடைந்த செய்தியை அறிந்து விரைந்து வந்து ஆறுதல் கூறி துக்கத்தில் பங்கு கொண்டவர்களிற்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களிற்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய நண்பர்களிற்கும், இரங்கல் உரையாற்றி அஞ்சலி செலுத்தியவர்களிற்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மேலும் எமக்கு பலவழிகளிலும் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

076 664 4237 (CS/55404) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 07 . 1949



இறப்பு 12 . 06 . 2024

### பாவிலுப்பிள்ளை மரியநாயகம்

நவாலியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை மரியநாயகம் கடந்த 12.06.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வஸ்ரியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீற்றம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, யேசுதாசன், தவரட்ணம், லூர்துநாயகி மற்றும் ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அனுஷியா (ஆசிரியர் - யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி) மற்றும் அனுஷாந் (ஆசிரியர் - யா / இந்துக்கல்லூரி), அனஸ்ரீன் (உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), ஆன் தர்ஷினி (உரிமையாளர் Anusha beauty Care) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டினேஷினி அவர்களின் அன்பு மாமனாரும், ஹெலின் நோறா, ஹெயில் ஜோடன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (17.06.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக நவாலி சென்பீற்றேர்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்பீற்றேர்ஸ் வீதி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 816 9984

(cs 55402) (N-1)

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 09 . 04 . 1979



விண்ணுலகில் 02 . 06 . 2024

### செல்வநாயகம் செல்வரஞ்சன் (செல்வா)

புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்கார்பரோவை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் செல்வரஞ்சன் கடந்த 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், செல்வமணி - காலஞ்சென்ற அற்புதநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெசிந்தாவின் அன்புக் கணவரும், கரிகாலன், எல்லாளன், அனாகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீறஞ்சனி, ஸ்ரீமனோகரி (பிரான்ஸ்), ஸ்ரீஜெயந்தினி (கனடா), ஸ்ரீதர்சினி (லண்டன்), மோகன்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீவிக்னேஸ்வரராஜா மதியழகன் (பிரான்ஸ்), கஜீ (கனடா), சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், நிகேஷ், நிதுஷன், கம்சிகா, திவ்விஜா, நிக்சன் (பிரான்ஸ்), நிகாஸ்திகா, குணள் (பிரான்ஸ்), நந்தீஸ் (கனடா), கவின், கவிசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.06.2024) திங்கட்கிழமை Ajax Crematorium & Visitation Centre, 384 Finaley Avenue. Ajax ON L1S 2E3 என்னும் முகவரியில் முற்பகல் 8.00 மணிமுதல் 11.00 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஜெசிந்தா (மனைவி) - 647 657 6120
[illegible] - 416 317 2292
[illegible] (தம்பி) - 077 977 3341
உசான் (நண்பர்) - 647 886 9429

(CS/55401) J-1

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வேணவாக்களுக்கு அடித்தளம் அமைப்போம்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 16

செயல்வடிவத்தை அண்மித்துள்ள தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தை சரியான முறையில் முன்னகர்த்தி வெற்றிபெறச் செய்ய - எதிர்பார்க்கும் இலக்கை அடைய நாம் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் மையக் குழு வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

தற்போதைய சூழலில் தமிழர்கள் தங்களுடைய தமிழ்த்தேசிய அபிலாஷைகளை ஒருமித்த குரலில், ஒரு தேசமாக சிங்கள மக்களுக்கும், சர்வ தேசத்துக்கும் சொல்லக் கூடிய ஒரு வாய்ப்பை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முயற்சித்துப் பார்ப்பது காலத்தின் தேவையாகத் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் கருதுகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்குத் தமிழ்ப் பொதுச்சபை மேற்கொண்டு வரும் முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆதரவளிக்கும்.

இந்தவார இறுதியில் இதுதொடர்பான கருத்துருவாக்கத்தை மேலும் பலப்படுத்தவும், நடைமுறை யதார்த்தங்களைத் தெளிவுபடுத்தவும் மக்கள் இயக்கமாக கலந்துரையாடல்களைப் பல தளங்களிலும் செய்ய எதிர்பார்க்கின்றது.

இங்கு வேட்பாளர் யார்? என்பது முக்கியமல்ல. கருத்தியல் தளமே முக்கியமானது. விமர்சனங்களைத் தவிர்த்து ஆக்கபூர்வமான கருத்தியல் தளம் சார்ந்து விவாதிப்போம்- என்றுள்ளது. (ச-66)








சந்நிதியான் ஆச்சிரமத்தினரின் ஏற்பாட்டில், புத்தளம் சேனைக் குடியிருப்பு மற்றும் மணற்குன்று ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கான இலவச கண் மருத்துவப் பரிசோதனை முகாம், கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ப-66)



## சமாதான நீதிவானாக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஓய்வுபெற்ற ஆசிரியர் குணராஜசிங்கம் ஸ்ரீ ராகவராஜன் அகில இலங்கை சமாதான நீதிவானாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியரான இவர் விவசாய டிப்ளோமா, கலைமாணி கல்வியியல் டிப்ளோமா பட்டம் பெற்று 32 வருட ஆசிரியர்சேவையைபூர்த்தி செய்தவராவார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து...

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 128 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அந்த அணி சார்பில் தர்மதாஸ் சுஜீவதாஸ் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் சிவராசா கேசிகன் 4 விக்கெட்டுகளையும், யோகரட்ணம் கிருசாந் மற்றும் ரமேஷ் திஷானன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.




பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணிக்கு அதிகபட்சமாக ரமேஷ் திஷானன் 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில், பகீரதன் சஞ்சய் 5 விக்கெட்டுகளையும், ஜெயபாலன் சந்துபாலன் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

27 ஓட்டங்கள் பின்னிலையுடன், இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, இரண்டாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பகீரதன் சஞ்சய் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யோகரட்ணம் கிருசாந் மற்றும் ரமேஷ் திசானன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

166 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியினர் 4 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ரமேஷ் திஷானன், சிறந்த பந்துவீச்சாளராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பகீரதன் சஞ்சய், சிறந்த களத்தடுப்பாளராக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிஷாந் மதுசன், சகலதுறை வீரனாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பகீரதன் சஞ்சய், ஆட்டநாயகனாக நிஷாந் திசானன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-ம-125)

## ராஜித,...

கூட்டணியில் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் அங்கம் வகிப்பார்கள் என ரணில் சார்பு உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலரும் ரணிலின் பக்கம் வரவுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (அ-ம-44)

## மைதானத்துக்குள்...

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மீசாலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலையில் உள்ள விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுச் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மீசாலை, கரப்பந்து விளையாட்டுக் கழகமொன்று, கரப்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது. தொடரின் இறுதியாட்டம் நேற்று இரவு 7.30 மணிக்கு நடைபெறுவதாகவிருந்தது. இந்த நிலையில், மாலை 5 மணியளவில் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று அங்கிருந்தவர்கள் மீதும், வீதியால் சென்றவர்கள் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளது. அத்துடன் வாள்வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

விடயம் ஊர் மக்களுக்குத் தெரியவந்ததையடுத்து அவர்கள் ஒன்றுதிரண்டு காடையர்களை மடக்கிப்பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் அவர்களைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். தாக்குதலை நடத்திய குழுவில் இருந்த நால்வரே இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் தப்பிச் சென்ற நிலையில், அவர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். அத்துடன், அந்தக் குழுவால் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி, வாள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## துணவி...

வித்துள்ளனர். வெதுப்பகத்தில் பணிகளை முடித்துவிட்டுத் திரும்பியவர் மீதே வாள்வெட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. மோட்டார்சைக்கிளில் வந்த நால்வரே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் அவர்களில் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-ம-125)

## மீன்பிடித்...

மாகாண மீனவர்கள் அச்சமான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் நடைமுறையில் இருந்ததால், கடந்த சிலவாரங்களாக அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் வடக்கு கடற்பரப்பில் இடம்பெறவில்லை. தற்போது அந்தத் தடை முடிவடைந்துள்ளதால், இந்திய இழுவைமடிப் படகுகள் வடக்குக் கடற்பரப்பில் மீண்டும் அத்துமீறலாம் என்று வடமாகாண மீனவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தமிழகத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மீன்பிடித் தடைக்காலம் அடுத்த சில மாதங்கள் நீடிக்கப்பட வேண்டும் என்றும் இதற்குள் அத்துமீறிய மீன்பிடி மற்றும் இழுவைமடி மீன்பிடி தொடர்பில் தீர்க்கமான பேச்சுகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் வடமாகாண மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தில் அண்மையில் மனு ஒன்றைக் கையளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தேர்தல்...

ரும் முக்கியஸ்தருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்குச் சென்று 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதி வழங்கியிருக்கின்றனர்.

முழுநாட்டுக்கும் இடையூறாக இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்தார். அரசமைப்பின் பிரகாரம், மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர்கள் தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் எமது ஆட்சியில்தான் அபிவிருத்தியடைந்தது.

தேர்தல்காலப் பிரசாரமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பயன்படுத்துவதை அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தம் பற்றி அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், காலவரையறையின்றி, பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல் பற்றி எவரும் பேசுவதில்லை. மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் அறியவில்லையா? மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கட்சி என்ற ரீதியில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (அ-ம)

## ஜெய்சங்கர்...

கைக்கு வரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அண்மையில் இடம்பெற்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்தது. மோடியின் கடந்த அமைச்சரவையில் இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜெய்சங்கர், தற்போதைய அமைச்சரவையிலும் அதே பதவியில் தொடர்கின்றார். அவரை இந்தியாவில் வைத்து அண்மையில் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, எதிர்வரும் 20ஆம் திகதி ஜெய்சங்கர் இலங்கைக்கு வரவுள்ளார். இந்தப் பயணத்தின்போது, இலங்கையில் இந்திய முதலீடுகள்மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் ஜெய்சங்கர் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், ஜெய்சங்கரின் வருகை வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட மூலோபாயங்களை மையப்படுத்தியதா என்ற கேள்வியும் கொழும்பில் எழவே செய்கின்றது. இந்தப் பயணத்தின்போது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சு நடத்த வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், ஜெய்சங்கர் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இலங்கைக்கு மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## நாடாளுமன்றத்திலும்...

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் தமது வடக்கு பயணத்தின்போது, தாம் ஆட்சியமைத்தால் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

எனினும், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் உறுதியான பதிலை அவர்கள் வழங்கவில்லை. இந்த நிலையில் இவ்விரு அதிகாரங்கள் தொடர்பில் இவர்களின் நிலைப்பாடு என்னவென்று பொதுஜன பெரமுனக் கட்சி மற்றும் தேசியவாத அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஜூன் மாதத்துக்குரிய 2 ஆவது வார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதன்போதும் இந்த விடயம் தொடர்பில் பெரமுன கேள்விகளை எழுப்பவுள்ளது. அதேபோல தமது வடக்கு விஜயம் பற்றியும், 13 தொடர்பிலும் சஜித் மற்றும் அநுர ஆகியோர் நாடாளுமன்றத்தில் கருத்துகளை வெளியிடுவார்கள் எனவும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## சர்வஜன...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கருத்து வெளியிட்டபோது, அது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவினேன். அவ்வாறான எவ்வித் திட்டமும் இல்லை, தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

அடுத்து சர்வஜன வாக்கெடுப்புமூலம் ஜனாதிபதியின் பதவிக்கால நீடிப்பு பற்றியும் தகவல்கள் வெளியாகின. அது பற்றியும் வினவினேன். அவ்வாறு எவ்வித் திட்டமும் இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். வெறியோ, தோல்வியோ நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் பெரும்பாலானவர்கள் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்குண்டு

- தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் பிரதான காப்பெற் டச்சு வீதியில் இருந்து 300m தூரம்.
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதிகள்
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- ஒரு பரப்பின் விலை 12 லட்சம்

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**தொடர்புகளுக்கு:**
ஜெயம் { 077 986 5457
077 241 7589

(CS-55384) V-1

# தமிழக மீனவர்கள் இருவர் உயிரிழப்பு



*சென்னை, ஜூன் 16*

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள், கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மீன்பிடித் தடைக்காலம் முடிவடைய முன்னர், முறையான அனுமதியில்லாமல் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ம-56)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

71, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணத்தில் ஒருபரப்பும் ஒன்பது குளியும் கொண்ட காணியும்,வீடும் விற்பனைக்கு உண்டு.

**T.P No.** 076 267 1530
076 577 3567

## மு/மல்லாவி மத்திய கல்லூரி

**(தேசிய பாடசாலை)**

**பழைய மாணவ (தாய்ச்) சங்க**

**ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் - 2024**

**காலம் :- 30.06.2024 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் :- முற்பகல் 10.00 மணி**
**இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்**

அனைத்து பழைய மாணவ தாய்ச் சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
பழைய மாணவர் தாய்ச் சங்கம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை)

(CS/55400) J-1

# 1ஆம் ஆண்டு நினைவு நாள்



கடந்த 28.06.2023 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**

## சர்வேஸ்வரன் புஸ்பராணி

**(தேவி)**

அவர்களின் முதலாம் ஆண்டுத்திவச நிகழ்வு இன்று (16.06.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

தோற்றம்
06.01.1965

மறைவு
28.06.2023

காரைக்கால் சிவன் கோவில் ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்

(CS/55383) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/7219) J-1

**074 173 7684**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. (CS/53400) J-1

**076 705 8399, 077 262 7890**

## காணி விற்பனைக்கு

பிரம்படிலேன், கொக்குவிலில் 1 பரப்பும் 1.85 குளியும் கொண்ட காணி விற்பனைக்கு. (தரகர் வேண்டாம்)

தொடர்புகளுக்கு:

**077 224 6652** (உரிமையாளர்)

## யாழில் இருமாடி விற்பனைக்கு

Old Park Road சுண்டிக்குளி யாழில் 2 பரப்பு 7.48 குளியில் 3243 ச.அடி

**வீடு உடன் விற்பனைக்கு** (CS/55288) J-1

**070 257 5693, 077 661 3486**

## வேலையாட்கள் தேவை

332 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மொத்த சில்லறை வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்பவர், Bill Clerk தேவை. (CS/55398) J-1

தொடர்புகளுக்கு:- **077 763 4074**

---

வண்ணை ஶ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஆலயத்தின் பழைய மர, இரும்பு கதவுகள் மற்றும் கருங்கல் டஸ்ற் விற்பனைக்கு. (CS/55403) J-1

தொடர்பு:- **077 674 5885**

## வேலையாட்கள் தேவை

இல 87/1, A9 வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள Super Market இற்கு கணினி அறிவுள்ள இருபாலாரும் தேவை. (CS/55399) J-1

தொடர்பு:- **077 763 4074**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் K.K.S வீதியில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை. (CS/55406) J-1

தொடர்பு:- **076 267 7434**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி பிரபல அழைப்பிதழ் நிறுவனத்திற்கு Social media, Basic website, Basic Accounts Admin Female Staff தேவை. (CS/55387) J-1

தொடர்பு:- **077 815 2693**

## உடன் தேவை

யாழ் நகரில் இயங்கும் இலத்திரனியல் விற்பனை நிலையத்திற்கு அலுவலக பெண் உதவியாளர் தேவை. (CS/7591) J-1

தொடர்பு:- **077 356 2043**

---

## நில அளவை சேவை

நில அளவை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட எனது சேவையை மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளேன். உங்கள் காணிகள் மற்றும் கட்டடங்கள் அளவைகளை மிக விரைவாகவும் கழிவுக் கட்டணத்துடனும் செய்து தரப்படும். (CS/55394) J-1

தொடர்பு:- K.S. சந்திரசேகரம் **074 010 2497**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்தி அருகாமையில்

**A-9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (Pvt) Ltd. (CS/55388) J-1

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

---

## Tharany SUPERMARKET

தாரணி சூப்பர்மார்க்கெட்டின் கிளிநொச்சி கிளையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு

### மாபெரும் அதிரடி சலுகை

**ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்**

இச் சலுகை 2024.06.19 மட்டுமே

ஒரு அலகிற்கு மேற்பட்ட கொள்வனவிற்கும் ஒரு அலகு மாத்திரமே இலவசமாக வழங்கப்படும்.




1Kg சீனி வாங்கினால் அதே 1Kg சீனி இலவசம்



**19.06.2024 புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் இரவு 10 மணிவரை**









Tharany SUPERMARKET

இல.12, திருநகர் வீதி, கிளிநொச்சி
(கரைச்சி பிரதேச சபைக்கு முன்பாக)

077 744 0304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

வலிமை உள்ளவன் வச்சது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி
பிறர் வாழ உழைப்பவர் சொல்லுவதெல்லாம் சட்டம் ஆகணும் தம்பி
நல்ல சமத்துவம் வந்தாகணும்
அறிவே மகத்துவம் உண்டாகணும்
நாம பாடுற பாட்டும் ஆடுற கூத்தும் படிப்பினை தந்தாகணும்
நாட்டுக்கு படிப்பினை தந்தாகணும்

—புலமைப்பித்தன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 ஆனி 2 ஞாயிற்றுக்கிழமை (16.06.2024) சிகரம் : 206



# இருட்டில் நடந்த இனப்படுகொலை

'Like Sri Lanka once did, Israel has turned 'safe zones' into killing fields'என்ற தலைப்பில் அல்ஜசீரா இணையத்தளத்தில் Neve Gordon and Nicola Perugini எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது

தமிழாக்கம்:
ந.பரமேஸ்வரன்

முன்பு இலங்கை செய்ததைத்தான் இப்போது இஸ்ரேல் செய்கிறது. சூனியப்பிரதேசங்கள் கொலைக் களங்களாக மாற்றப்பட்டன; ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால் காஸாவில் இனப்படு கொலை இருட்டில் நடைபெறவில்லை.

இப்போது எங்கள் எல்லோருடைய கண்களும் இஸ்ரேலினால் அறிவிக்கப்பட்ட ராபாவின் '2371' சூனியப்பிரதேசத்தைத்தான் பார்த்துக்கொண்டிருக்கின்றன. மே 22 ஆம் திகதி இந்தப்பிரதேசம் சூனியப்பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டு நான்கு நாள்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொட்டகைகளில் தங்கியிருந்த 45 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

நாங்கள் 15 வருடத்துக்கு முந்திய விக்கிலீக்ஸ் கேபிள்களை எடுத்துப்பார்த்தால் இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தில் தமிழ்மக்கள் பட்ட துன்பங்கள் தெரியவரும். 2009 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வொஷிங்டனுக்கு அனுப்பிய கேபிளில் இலங்கை இராணுவத்தால் சூனியப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் 7 கத்தோலிக்க மதகுருமார் அகப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கத் தூதரகத்தை இந்த விடயத்தில் தலையிடுமாறும் மன்னார் ஆயர் கோரிக்கை விடுத்திருந்தார்.

மன்னார் ஆயரின் கோரிக்கையைத் தொடர்ந்து இலங்கையின் வெளியுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்ட அமெரிக்கத் தூதரகம், மன்னார் ஆயரின் கூற்றுப்படி மான்ஹட்டன் பூங்காவை விட இரண்டு மடங்கு பெரிய கடலோர நிலப்பரப்பினுள் 60,000-75,000 மக்கள் அகப்பட்டுள்ளதாகவும் இந்தப்பிரதேசம் ஒரு மரணப் பொறியாக மாறியுள்ளதாகவும் இராணுவத்தினருக்கு தெரியப்படுத்துமாறு கோரியது.

இஸ்ரேலைப் போலன்றி இலங்கை இராணுவம் சூனியப்பிரதேசத்தில் ஒன்று கூடுமாறு விமானங்களிலிருந்து துண்டுப்பிரசுரங்களை வீசியும் ஒலிபெருக்கி மூலமும் அறிவித்தல் விடுத்தது.

3,30,000 இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக முகாம்களில் ஒன்று கூடினர். ஐ.நா. உட்பட பல மனிதாபிமான நிறுவனங்கள் இந்த மக்களுக்கு உதவிகளை வழங்க முன் வந்தன.

இந்தப்பிரதேசத்தில் பதுங்கு குழிகளுக்குள் இருந்து தமது இறுதித் தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் தயாராகினர். இலங்கை இராணுவம் புலிகளிடமிருந்து மக்களை மீட்பதற்கான மனிதாபிமான யுத்தம் என இந்த நடவடிக்கைக்கு பெயரிட்டது. செயற்கைக்கோள் ஒளிப்படங்களின் படி இராணுவம் சூனியப்பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் ஆட்லறித் தாக்குதல் நடத்தியது தெரியவந்தது. பாதுகாப்பான பிரதேசங்கள் கொலைக்களங்களாக மாறின.

10,000 - 40,000 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். நிரந்தர,தற்காலிக மருத்துவமனைகள் அனைத்தின் மீதும் இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடத்தியது.

2009 இல் இலங்கையில் நடைபெற்றதும் 2024ல் காஸாவில் நடைபெறுவதும் விசித்திரமான ஒன்று தான். இரண்டு சந்தர்ப்பத்திலும் இராணுவம் பாதுகாப்பான பிரதேசம் என மக்களை அழைத்துவிட்டு அவர்களைத் துன்புறுத்தியது.

இரண்டு சந்தர்ப்பத்திலும் இராணுவம் மக்களை பாதுகாக்க வேண்டிய மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இரண்டு சந்தர்ப்பத்திலும் இராணுவப் பேச்சாளர்களும் புலிகளும் ஹமாஸும் மக்களை மனித கேடயங்களாக பாவித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு சந்தர்ப்பத்திலும் மேற்குலக நாடுகள் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை கண்டித்துக்கொண்டு ஆயுதங்களை விநியோகித்துக்கொண்டிருந்தன. இலங்கை விடயத்தில் இஸ்ரேல் இலங்கையின் பிரதான ஆயுத விநியோகஸ்தராகச் செயற்பட்டது. இரண்டு சந்தர்ப்பத்திலும் ஐ.நா . இரு பகுதியினரும் யுத்தக்குற்றங்களிலும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபட்டதாகக் கூக்குரலிட்டது.



இரண்டு சந்தர்ப்பத்திலும் ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகிறது , அது என்னவென்றால் காஸாவில் இடம்பெற்ற இனப்படுகொலை இருட்டில் நடைபெறவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான சுயாதீனத் தகவல்களை திரட்டுவதற்கு கால அவகாசம் தேவைப்பட்டாலும் காஸாவில் தலை துண்டிக்கப்பட்ட குழந்தைகளின் சடலங்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன. காஸாவில் 2000 இறாத்தல் நிறையுடைய குண்டுகள் எவ்வாறு ஆயிரக்ணக்கான பாலஸ்தீனர்களின் உயிர்களை பலியெடுத்தன என்பதை ஊடகங்கள் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளன.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராகவும் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலண்டுக்கு எதிராகவும் யுத்தக்குற்றங்கள் தொடர்பாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகவும் தகவல்களைத் திரட்டி வருகிறது.

சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலின் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு கட்டளையிட்டது. இது ராபாவில் பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலை வெளிக்கொண்டு வந்தது.

சர்வதேச நீதிமன்றம் கட்டளை பிறப்பித்த 48 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர் . ஜூன் 9ஆம் திகதி ஐ.நா.வினால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பெண்களும் சிறுவர்களுமாக 271 பேர் கொல்லப்பட்டனர்.

அனைவரது கண்களும் ராபாவின் மீது இருக்கையில் பிரான்ஸ்,அமெரிக்கா,ஜெர்மனி,பிரிட்டன் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுதங்களை விநியோகித்து வருகின்றன.

தென்னாபிரிக்கா,ஸ்பெயின்,அயர்லாந்து,நோர்வே, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் இஸ்ரேல் மீது ஆயுதத்தடை விதிக்குமாறு தமது அரசாங்கங்களைக் கோரி வருகின்றன. இந்தக் கோரிக்கை, இஸ்ரேல் எப்படி சூனியப்பிரதேசங்களை கொலைக்களங்களாக மாற்றியது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

குடியேற்ற காலப்பகுதியில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப்போன்று இஸ்ரேல் இப்போது காஸாவில் தனது அழித்தல் நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதும், அதைச் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதாக சித்திரிக்கும் அதன் விகாரமான முயற்சியும் அதன் அபகரிப்பு திட்டத்தின் கடைசி அறிகுறிகளாகும். இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற முன்னாள் காலனித்துவ சக்திகளும், அமெரிக்காவும் அதனைத்தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் அனைவரின் பார்வையும் காஸாவை நோக்கியே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாக்குமூலம் மூன்று வழக்குகள்



கே.வி.தவராசா

தொ முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கனகரட்ணம் ஆதித்தன் என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டிருந்தார். இவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு , கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவ்வேளையில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு, எனது சமர்ப்பணத்தில் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தேன்.

எனினும் கனகரட்ணம் ஆதித்தனால் சுய விருப்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கு வழங்கியதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அரச சாட்சியமாக கொண்டு கொழும்பு மேல் நீதிமன்றில் இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் ஒரு வழக்குமாக மூன்று வழக்குகள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன.

1) யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் 1995ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கிளிநொச்சியில் ஆயுதப் பயிற்சி பெற்றமை

2) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி கொலை முயற்சியில் ஈடுபட்டமை

(இந்த வழக்கில் கனகரட்ணம் ஆதித்யன் மற்றும் கந்தவனம் கோகுல்நாதன் ஆகிய இருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. சந்தேகநபர்களால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 13 அரச சாட்சிகள் என்பன குறிப்பிடப்பட்டு, 2009 ஆம் ஆண்டு சுதந்திரதின விழாவிலும், தியத்தலாவ. இராணுவ முகாமிலும் மேற்குறிப்பிட்ட பிரமுகர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது)

(3) பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பசீர்அலி மொகமட் என்பவரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி, 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுவப் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த கொமாண்டோக்கள் உட்பட மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் மேலும் 10 பொதுமக்களுக்கு கடும் காயத்தை ஏற்படுத்தியமை.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது அரச சட்டத்தரணியால் அரசதரப்பு சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லையென யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் 29.07.2015 இல் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தார். மீண்டும் இந்த வழக்கு மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளையில் வழக்கைத் தொடர்ந்து நடத்த வேறு சாட்சியங்கள் இல்லையென அரசசட்டத்தரணி நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியதையடுத்து எதிரி 17.09.2015 இல் யாழ்ப்பாண மேல் நீதிமன்றினால் குறித்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவர் மீது இன்னும் இரு வழக்குகள் இருந்தன.

அரசியல் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாகக் கொண்ட, நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், முதலில் ஏதேனும் ஒரு மேல் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பையே ஏனைய நீதிமன்றங்களும் பின்பற்றுவதும் , அதன் படி தாமும் தீர்ப்பு வழங்குவதுமே 1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறையாகயிருந்தது. ஆனால் சட்டமா அதிபர் இந்த நீதிமன்றில் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளையும் மீளப்பெறாமல் அரச சட்டத்தரணி யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை மீண்டும் இந்த வழக்கில் உண்மை விளம்பல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென கோரிக்கையை முன்வைத்தார். இதனை நான் கடுமையாக ஆட்சேபித்தேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், அந்தச் சட்டத்தினுள் தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கான, நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கில் காஸ்டபிள் சிவநேசனை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 1982 ஆம் ஆண்டு குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் நான் கனிஷ்ட சட்டத்தரணியாக முன்னிலையானதில் இருந்து இன்று வரை கடந்த 40 ஆண்டுகளாக அரசியல் கைதிகளுக்காக ஆயிரக்கணக்கான வழக்குகளில் முன்னிலையாகி யிருக்கிறேன். யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பால் அரச தரப்பு அதிருப்தியடைந்திருந்தால், அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவையோ அல்லது மேன்முறையீட்டையோ தாக்கல் செய்திருக்கவேண்டும் ஆனால் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவில்லை.




இந்த வழக்கில் வழமையான நடைமுறையை சட்டமா அதிபர் பின்பற்றவில்லை. அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு மாறாக, சட்டமா அதிபரின் வேண்டுகோளை அடுத்து இந்த நீதிமன்றம் வழக்கு விசாரணைகளை நடத்தி முடித்துள்ளது. அரசமைப்பின் உறுப்புரையில் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது.

### மேல் நீதிமன்றம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் நீதி நிர்வாகத்துக்கான முதல் நிலை நீதிமன்றங்கள் இலங்கைக் குடியரசில் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகியனவாக இருக்கவேண்டுமென நீதித்துறை சட்டத்தின் பிரிவு 2 விதித்துரைக்கின்றது. எனவே குடியரசின் ஒரு மேல் நீதிமன்றம் குறித்தே அது குறிப்பிடுகின்றது. உறுப்புரை 154 (1) இற்கமைய மாகாண மேல் நீதிமன்றங்களை ஏற்படுத்திய அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் 1987 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டதன் பின்னரும்கூட, அரசியலமைப்பின் 111(1)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 2 மாற்றமேதுமின்றி இன்னும் அப்படியே வைக்கப்பட்டுள்ளது. மாகாண மேல் நீதிமன்றங்களுக்கான நீதிபதிகள் மேல் நீதி மன்ற நீதிபதிகள் மத்தியிலிருந்தே (தெரிவு செய்யப்பட்டு) நியமிக்கப்படுகின்றனர். எனவே, மாகாண மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மாகாணம் தொடர்புபட்ட குற்றவியல் விடயங்களை (விசாரித்து) தீர்ப்பளிக்கின்றனர் என்பதைவிட, அரசியலமைப்பின் 111 ஆம் உறுப்புரையினால் தாபிக்கப்பட்டு இன்னும் வழக்கிலிருக்கும் இலங்கையின் மேல் நீதிமன்றங்களுக்குரிய குற்றவியல் விடயங்களை அவர்கள் (விசாரித்து) தீர்ப்பளிக்கின்றனர்.

1987 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குப் பின்னரோ அரசியலமைப்புத் திருத்தத்துக்கமைவாக திருத்தப்படாத (முன்னைய) அரசியலமைப்பின் 105(1) ஆம் உறுப்புரையில் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது. அத்துடன், அரசியலமைப்பின் 154P(3)ஆம் உறுப்புரைதான் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கு பல நியாயாதிக்கங்களை வழங்குகின்றது அத்துடன், அரசியலமைப்பின் 154P(3)(a)ஆம் உறுப்புரைக்கமைய, ஒவ்வொரு மாகாண மேல் நீதி மன்றமும் 'மாகாணத்தினுள் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கையின் மேல் நீதிமன்றங்களின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தை சட்டத்துக்கமைய பிரயோகிக்க வேண்டும்'. இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது என்பதை இந்த நீதிமன்றம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது எதிரியின் சார்பில் முன் வைக்கப்படும் முதல் நிலை சட்ட வாதமாகும்.

### பல முக்கியமான முரண்பாடுகள்

மேலும் அரச தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்கையில் பல முக்கியமான முரண்பாடுகள் இந்த நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் முன்பு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதும் சாட்சியத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது 20.07.2010 ஆம் ஆண்டு காலை 9 மணி 35 நிமிடத்துக்கு எதிரி குற்றஒப்புதல் வாக்குமூலத்தை தனது கையால் பதிவு செய்யத் தொடங்கி பகல் மணி வரைக்கும் எந்த இடைவெளியுமின்றி தொடர்ந்து பதிவு செய்ததாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்துள்ளார். இந்த நிலையில் முற்பகல் 11 மணி 30 நிமிடங்கள் நீர் ஆகாரத்துக்காக நிறுத்தப்பட்டதாக மொழிபெயர்ப்பாளர் சாட்சியமளித்துள்ளார் . உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் எழுதப்பட்டிருந்தால் இந்த சாட்சிய முரண்பாடு ஏற்பட முடியாது. குற்றஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்றஒப்புதல் வாக்குமூலம் வழங்கினால் ஏற்படும் சட்ட விளைவுகளை தான் விளங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு வெள்ளை வானில் கடத்தப்பட்டு பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட கனகரட்ணம் ஆதித்தன் 2009 ஆம் ஆண்டிலிருந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரிவு 15(1) கீழ் வழங்கப்பட்ட வழக்கு விசாரணை முடியும் வரையிலான தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தொடர்ந்து தனிமையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அரச தரப்பு தடுப்புக் காவல் உத்தரவின் பிரதியை நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை . எனவே சட்டரீதியான தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதனை அரசதரப்பு நிரூபிக்கத் தவறியுள்ளது.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## அறைகூவல்!

**தலைப்பு:**
**நன்னீர் பயணத்தில் நான்கு வாரங்கள்**

மே - ஜூன் உள்ளடங்கிய நான்கு வார காலத்தில் நீர் வள நெருக்கடி தொடர்பாக நாம் மேற்கொண்ட பயணங்கள், செயற்பாடுகள், பார்வையிடல்கள், சந்திப்புகள் என்பவற்றின் தொகுப்பும் தெரிவுகளும்

வழி நடத்துபவர்-
பேராசிரியர் N. ஸ்ரீஸ்கந்தராஜா

நேரம் - 7.30 p.m.
திகதி - 20.08.2024 (வியாழன்)

அடையாளம்
890 4774 6976

கடவுச்சொல்
315613

எங்களுடன் இணைந்து உங்கள் கருத்துகளையும் பகிருங்கள். இணைப்பை அணுக கைத்தொலைபேசியால் மின்வருடவும்!

# புலமையாளர் பதில்

**கேள்வி:** RO மூலம் நீர் சுத்திகரிக்கப்படும் போது இயல்பாக நீரில் உள்ள உடலுக்கு அவசியமானதெனக் கருதப்படும் கனிமப் பொருள்களும் அகற்றப்படுகின்றன என்றும் நீண்ட காலத்துக்கு கனிமப் பொருள்கள் இல்லாத நீர் பாதகமானது என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மைதானா? இவ் விடயத்தை தெளிவுபடுத்தமுடியுமா?

*(வ. மதுஷா*
*யாழ்/இந்து மகளிர் கல்லூரி )*

**பதில்:** ஆமாம். உங்கள் கேள்வி மிகவும் முக்கியமானது. RO (Reverse Osmosis) முறையில் நீர் சுத்திகரிக்கப்படும்போது இயல்பாகவே நீரில் உள்ள, உடலுக்குத் தேவையான சில கனிமப்பொருள்கள், உதாரணமாக கல்சியம், மக்னீசியம், சோடியம், இரு காபனேற்றுகள் போன்றன அகற்றப்படுகின்றன. RO முறையில் நீரைச் சுத்திகரிக்கும்போது நமது உடலுக்குத் தேவையான மேலே குறிப்பிடப்பட்ட கனிமங்கள் நீக்கப்படுவதால் இந் நீரை மட்டும் நீண்ட காலத்துக்குப் பருகும்போது இக்கனிமப்பொருள்களின் குறைபாடு உடலுக்குப் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும். மேலும் நாம் பருகுவதற்குரிய நீரின் pH பெறுமானம் 6.5 - 8.5 ஆக இருக்க வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுகிறது. எனினும், RO முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரின் pH பெறுமானம் 6.5 ஐ விடக் குறையும் சாத்தியப்பாடுகள் அதிகம். இந்த சுத்திகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் நீரில் அகற்றப்பட்ட உடலுக்கு அத்தியாவசியமான கனிப்பொருள்கள் மீண்டும் சேர்க்கப்படல் வேண்டும் . ஆயினும் அதற்கான செலவு காரணமாக, அங்ஙனம் நீரை விற்பனை செய்பவர்கள் பொதுவாகக் கனிமங்களை மீளச் சேர்ப்பதில்லை. இதனால் இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட நீரை நீண்ட காலத்துக்கு பருகுவது ஆரோக்கியமானதல்ல. அத்துடன், நுகர்வோர்/ பாவனையாளராக, தாம் கொள்வனவு செய்யும் சுத்திகரிக்கப்பட்ட நீரிலே கனிமங்கள் மீளச் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும்.

**குமாரமுகன் அருணா,**
இரசாயனவியலாளர்,
நீர்வளச்சபை,
யாழ்ப்பாணம்.



கடந்த மாத அமர்வு

# பூநகரி பயணமும் புதுமைகளும்



கடந்த மாதம் 23 ஆம் திகதி வடக்கின் நீர்வாண்மையாளர்களுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தை நோக்கிய முழு நாள் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டோம். அங்குள்ள நீர்வளம் தொடர்பான ஆழமான பார்வையைப் பெறுதல், அப்பிரதேசத்தின் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களுடன் நீர்வளம் கொண்டிருக்கும் தொடர்பு , இவ்வகையில் பூநகரி பெறும் முக்கியத்துவம் ஆகியவற்றை அறிதல் போன்ற நோக்கங்களுடன் பல்துறைசார் வல்லுநர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களது பங்கேற்றலுடன் பயணம் ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் மண்ணித்தலை பிரதேசத்தை நோக்கிய பாதையின் இருமருங்கிலும் உவர் சதுப்பு நிலங்களில் அடர்ந்து பரந்திருந்த கண்டல் தாவரங்களைப் பார்வையிட்டதுடன் சூழல் தொகுதியில் அத்தாவரங்கள் பெறும் முக்கியத்துவம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் இக்கண்டல் தாவரங்களில் கிட்டத்தட்ட 20 வேறுபட்ட இனங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இவை ஒட்சிசன் குறைவான மண்ணில் வளரும் தன்மை கொண்டிருப்பதாகவும், அயன வலய, அயன அயல் வலய பகுதிகளிலேயே செறிந்து வளரும் எனவும் சதுப்பு நிலங்களில் ஒட்சிசன் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் இத் தாவரங்களின் சுவாசிக்கும் வேர்கள் நீருக்கு மேலாக வளர்ந்து தம்மைத் தகவமைத்துக் கொள்வது பற்றியும், கடலலையினால் ஏற்படக் கூடிய மண்ணரிப்பைத் தடுப்பதில் இவற்றின் வகிபாகம் பற்றியும் பல்துறைசார் கருத்தாடல்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அப் பிராந்தியத்தில் காணப்படும் மிநாசியோடை எனும் பகுதியில் வாழும் மக்களுடன் மேற்கொள்ளப்பட்ட யதார்த்தபூர்வமான உரையாடல் மூலம் அங்கு காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் குறித்த பகுதியில் உள்ள நீர் வளம் மக்களது சமூக, கலாசார, பொருளாதார வாழ்வியலில் ஏற்படுத்தும் செல்வாக்குப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மேலும் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய வீதி புனரமைப்பின் அவசியம், மழைகாலத்தில் ஏற்படும் பாதிப்புகள், இப்பெயர்வுக்குப் பின்னரான வதிவாளர் தொகை வீழ்ச்சி, பொருளாதார இடர்பாடுகள், கல்வித்தேவைகள் போன்ற விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

தொடர்ந்து மண்ணித்தலையில் காணப்படும் மணல் மேடுகளுடன் தொன்மையான வரலாற்று எச்சமாக நிலைத்து நிற்கும் 11 ஆம் நூற்றாண்டுக்குரியதாக அறியப்பட்ட சோழர் காலத்து சிவாலயமும் பார்வையிடப்பட்டு அவற்றின் சிறப்பம்சங்கள் தொடர்பாகவும் உரையாடப்பட்டன. பின்னர் கௌதாரி முனை கடல் பிரதேசம், அச் சூழலில் உள்ள தாழை மரங்கள், கரையோர மக்களின் வாழ்வியல் பற்றியும் அறிவதற்கான சந்தர்ப்பம் அமையப்பெற்றது.

உள்ளூர் விளைபொருள்களை மூலப்பொருளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் உற்பத்தி முயற்சிகள், அவை எதிர்கொள்ளும் சவால்கள், கண்ட அடைவுகள், பூநகரி ஐக்கிய அபிவிருத்தி மன்றம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான நிறுவனம் போன்றவற்றால் உருவாகி வரும் சமூக மாற்றம், அவை மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு அபிப்பிராயங்கள் பகிரப்பட்டன.

*எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி துளியின் 5 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
16 ஜூன் 2024

# அந்திமத்தில் அ.தி.மு.க.?

ஓ மயூ



ஜெயலலிதா தலைமையில் அசைக்கமுடியாத அரசியல் கட்சியாக வலம்வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை இப்போது பரிதாபத்துக்குரியதாக மாறியிருக்கின்றது.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க. தடுமாறுகின்றது என்ற விமர்சனத்தை உண்மையாக்கியிருக்கின்றது கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு. இம்முறை தேர்தலில் அ.தி.மு.க. ஒரு தொகுதியில் கூட வெல்லாததும், 7 தொகுதிகளில் வைப்புத் தொகையை இழந்துள்ளதும் தொண்டர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

2014ஆம் ஆண்டு நடந்த தேர்தலே செல்வி ஜெயலலிதா சந்தித்த கடைசி நாடாளுமன்றத் தேர்தல். "இந்த லேடியா? அல்லது மோடியா?" என்ற அவரது பரப்புரை முழக்கம் தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு 37 தொகுதிகளில் வெற்றிபெற்றது. அதன்பின்னர் அ.தி.மு.க. சந்தித்த இரு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தோல்வியையே சந்தித்துள்ளது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் ஒற்றைத் தலைமையாக உருவெடுத்த எடப்பாடி பழனிச்சாமி இப்போது கட்சி மட்டத்தில் விமர்சனங்களைச் சந்திக்க ஆரம்பித்திருக்கின்றார்.

"ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலிலும் கட்சிக்குத் தோல்விதான் ஏற்பட்டது. இடைத் தேர்தல் என்று அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்துள்ள இந்த முடிவுகளை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. தொடர்ச்சியாகச் சொதப்புகின்றார் எடப்பாடி பழனிச்சாமி" என்று விமர்சனம் கட்சியின் முக்கியஸ்தர்களிடம் இருந்து கிளம்பியிருக்கின்றது.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் அ.தி.மு.க.வுக்குள் ஏற்பட்ட பதவிப்போட்டியே பழம்பெரும் பலம்மிக்க கட்சியை இந்தப் பரிதாப நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கின்றது. எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்ச்செல்வம், சசிகலா என்ற மூவரிடையே உள்ள தலைமைத்துவ ஆசை, கட்சியை முச்சந்தியில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றது.

**இரும்புப் பெண் ஜெயலலிதாவால் கட்டியாளப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், சரியான தலைமை இன்றி இப்போது மாநிலத்தின் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியின் பின்னர் ஓ.பன்னீர்ச்செல்வம், சசிலகலா ஆகியோரிடம் இருந்து ஒற்றுமை அழைப்பு வந்திருக்கின்றது. ஆனால் எடப்பாடி பழனிச்சாமி தரப்பு அதை நிராகரித்திருக்கின்றது. ஆக இந்தப் பதவிப் போட்டிகளுக்கு தற்போதைக்கு முற்றுப்புள்ளி இல்லை என்றே தோன்றுகின்றது.

இரும்புப் பெண் ஜெயலலிதாவால் கட்டியாளப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், சரியான தலைமை இன்றி இப்போது மாநிலத்தின் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அ.தி.மு.க. உட்கட்சிப் பூசல்களை தீர்த்து, பதவிப்போட்டிகளைக் கைவிடாவிட்டால் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தமிழக அரசியலில் இருந்தே மறைந்து விடும் என்பதையே கடந்த தேர்தல் முடிவுகள் கட்டியம் கூறுகின்றன. ■






ஆர்.மித்ரா,
தரம் - 2C
யா/ சுண்டுக்குழி
மகளிர் கல்லூரி



ற.அனாகா,
தரம் - 1A
ஏஞ்சல் சர்வதேச
பாடசாலை



சி.பிரவின்,
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ஓ ந.பரமேஸ்வரன்

சுந்தரலிங்கம் இந்திய நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தது பற்றி ஏற்கனவே பார்த்துள்ளோம். இலங்கையிலும் இந்தியாவிலும் குடியியல் உத்தியோகத்தராக பணியாற்றிய சுந்தரலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதலாவது கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

1940 ஆம் ஆண்டின் பின்னர் சுந்தரலிங்கம் அரசியலில் இறங்க முடிவெடுத்தார். இரண்டு தடவைகள் தேர்தலில் தோல்வியுற்ற சுந்தரலிங்கம் 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வவுனியாத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார். தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களான ஜி.ஜி. பொன்னம்பலமும்,செல்வநாயகமும் சுந்தரலிங்கத்துக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. 1947 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்து ஆட்சியமைக்கமுடியவில்லை. மொத்தம் 95 ஆசனங்களில் 42 ஆசனங்களை மட்டுமே ஐக்கிய தேசியக்கட்சியால் கைப்பற்ற முடிந்தது. 19 ஆசனங்களை இடதுசாரிகளும்,7 ஆசனங்களை தமிழ்க் காங்கிரஸும், 6ஆசனங்களை இலங்கை-இந்திய காங்கிரஸும் கைப்பற்றின. ஏனைய தொகுதிகளில் சுயேச்சைகள் வெற்றி பெற்றிருந்தன. இடதுசாரிகள்,முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேரமாட்டார்கள் என்பது டி.எஸ்ஸுக்கு நன்கு தெரியும். தமிழ்க் காங்கிரஸ் 50-50 கோரிக்கையை முன்வைத்து பிரிட்டிஷாருடன் வாதாடிக்கொண்டிருந்தது.

**5**

சுயேச்சைகளை தன்பக்கம் இழுக்க நினைத்தார் டி.எஸ். தனது அரசியல் குருவான சுந்தரலிங்கத்தை அழைத்தார். தமிழ்க் காங்கிரஸுக்கும் சுந்தரலிங்கத்துக்குமிடையே அரசியல் பகை இருந்தது என்று டி.எஸ்ஸுக்கு தெரியும். 'எங்களுக்கு உங்களை விட்டால் வேறு யாருளர்?' என சுந்தரலிங்கத்துக்கு 'ஐஸ்' வைத்தார். ( இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த போது பகிரங்கக் கூட்டமொன்றிலும் கூறியுள்ளார்.) சுந்தரலிங்கத்துக்கு அமைச்சர் பதவி வழங்குவதாகவும் உறுதியளித்தார்.1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24 ஆம் திகதி சுந்தரலிங்கத்துக்கு வர்த்தக அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. சுதந்திர உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு லண்டன் சென்ற குழுவில் சுந்தரலிங்கமும் அனுப்பப்பட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மத்தியில் சுந்தரலிங்கத்துக்கு பெருமதிப்பு இருந்தது.சுதந்திர உடன்படிக்கையில் (இலங்கையில் ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்கிறோம் என- Unitary Ceylon என) சுந்தரலிங்கம் ஒப்பமிட்டார். டி.எஸ்ஸின் கனவு பலித்தது. டி.எஸ் தனது சகாக்களிடம் கூறினார் " மயிலே உனது இறகுகள் மிகவும் அழகாக இருக்கின்றன ஒரு இறகு போடு என்றேன் போட்டு விட்டது" எனக் கூறினார். படித்த முட்டாள் சுந்தரலிங்கம் விட்ட சிறு தவறை இன்று இலங்கைத்தமிழர்கள் அனுபவிக்கின்றனர்.

*(நன்றி: சிங்களவரின் நூறாண்டு கால சாணக்கியம் மறவன்புலவு சச்சிதானந்தன் )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல்களும் தமிழரசியலும்

நிலாந்தன்

இலவசமாகக் கிடைப்பதைப் பெரும்பாலானவர்கள் கைவிடமாட்டார்கள். இது பெரும்பாலான சமூகங்களிலும் காணப்படும் ஓரியல்பு. அதிலும் குறிப்பாக ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தில், கூட்டுக் காயங்களிலும் கூட்டு மன வடுக்களிலும் அழுந்திக் கிடக்கும் ஒரு சமூகத்தில், உதவிக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். கடந்த 15 ஆண்டு கால ஈழத்தமிழ் அரசியலானது அவ்வாறு உதவிக்காக காத்திருப்பவர்களுக்கு பொருத்தமான நிவாரணத் திட்டங்களையும் கட்டமைப்புகளையும் உருவாக்கத் தவறிவிட்டது.

2009 இல் காணாமல்போன தனது இளம் கணவனுக்காக போராடிய இளம் மனைவி இப்பொழுது முதுமையின் வாசலை அடைந்து விட்டாள். அவளுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. அப்படித்தான் காயப்பட்டவர்கள், அவயங்களை இழந்தவர்கள், மிகக்குறிப்பாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், கழுத்துக்குக் கீழ் இயங்க முடியாதவர்கள், இரு கண்களையும் இழந்தவர்கள், இரு கால்களையும் இழந்தவர்கள்...போன்றவர்களுக்கு உதவுவதற்கு ஒரு மையத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட எத்தனை கட்டமைப்புகள் உண்டு? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாக உள்ள பெண்களின் கண்ணீரை வைத்து அரசியல் செய்யும் ஒரு சமூகம், அந்தப்பெண்கள் மத்தியில் காணப்படுகின்ற இளவயதினருக்குப் புதிய வாழ்வைக் கொடுக்கத் தவறிவிட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ள ஒரு சமூகத்தில் பிறரிடம் இருந்து கிடைக்கக்கூடிய உதவிக்காக காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். தமிழ்ச்சமூகத்தில் பிறர் உதவியில் தங்கியிருக்கும் தொகையினரை கடந்த 15ஆண்டுகளாக அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனங்கள், அரசுசாரா நிறு வனங்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள தனிநபர்கள், தன்னார்வ அமைப்புகள், இவைதவிர நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள வள்ளல்கள், கொடையாளிகள் போன்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அரவணைத்து வருகிறார்கள். மேற்சொன்ன ஒவ்வொரு தரப்பும் அவரவர் நோக்கு நிலையில் இருந்துதான் அந்த மக்கள் கூட்டத்தை அரவணைக்கிறார்கள். அதனால் தேவை நாடிகளாக இருப்பவர்களுக்கு ஏதோ ஒரு விகிதமளவு நிவாரணம் கிடைக்கிறது. உதவிகள் கிடைக்கின்றன. உளவளத் துணையும் கிடைக்கின்றது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு செய்பவர்கள் தானம் செய்பவர்கள் முதலாவதாக, நல்லதைத்தான் செய்கிறார்கள். ஆனால் தொண்டும் தானமும் மட்டும் ஒரு சமூகத்தை அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழ வைக்க உதவாது. அந்த மக்களைக் கையேந்தி மக்களாக வைத்திருப்பதற்கும் அப்பால் அவர்களை வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் கொண்டவர்களாக, விடாமுயற்சி உள்ள உழைப்பாளர்களாக மாற்றவேண்டும்.

அது தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தானமும் தொண்டும் கருணையின் பாற்பட்ட செயல்கள் மட்டுமல்ல. அவை தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஒரு பகுதி. அவை தேசியக் கடமைகள். காயத்தில், துக்கத்தில், இழப்பில், தனிமையில் விழுந்து கிடப்பவர்களுக்குக் கைகொடுப்பது, அவர்களைத் தூக்கி நிறுத்துவது, அவர்களின் காயங்களை ஆற்றுவது, போன்றன ஒப்பீட்டளவில் 'செட்டில்ட்' ஆன தமிழ் மக்களின் தேசியக் கடமைகள். அதற்கு ஓர் அரசியல் தலைமைத்துவம்தான் முழுமையான பொருளில் வழி நடத்தமுடியும். ஓரளவுக்குச் சமூகத் தலைமைத்துவமும் மதத் தலைமைத்துவமும் செயற்பாட்டு அமைப்புகளும் செய்யலாம்.

ஆனால் அப்படிப்பட்ட செய்முறைகள் கடந்த 15 ஆண்டுகளாக மிகக்குறைந்த அளவில்தான் நடந்திருக்கின்றன. மிகக் குறைந்த தொகையினர்தான் அவ்வாறு வலுவூட்டப்பட்டிருக்கிறார்கள். பெருந்தொகையானவர்கள் தொடர்ந்தும் கையேந்திகளாகவும் நிவாரணங்களுக்காகக் காத்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின்னணியை வள்ளல்களும் கொடையாளிகளும் தமக்கு வசதியாகக் கையாளப் பார்க்கிறார்கள். கடந்த வியாழக்கிழமை அப்படி ஒரு சம்பவம் நடந்தது. அன்று கொழும்புக்கான ஐ.நா.வின் இணைப்பாளர், ஐ.நா., அலுவலகம் ஒன்றில் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதாக இருந்தார்.



**வள்ளல்கள் தங்களை புதிய எம்.ஜி.ஆர்.களாகக் கற்பனை செய்து கொண்டு, தான நிகழ்வை நாடகத்தனமாக ஒழுங்குபடுத்தி, பாட்டுக்கு எம்.ஜி.ஆர். போல ஆடி, யூடியூப்பர்களுக்குச் செய்தியாக மாறும் போதுதான், அது விவகாரமாகிறது.**

ஆனால் அவருடைய பயணம் சிறிது நேரம் தாமதம் ஆகியது. ஏனென்றால் அவர் வரும் வழியில் ஒரு பல்பொருள் அங்காடியைச் சூழ உள்ள பிரதேசத்தில் அசாதாரணமாக போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. அங்குள்ள ஒரு பல்பொருள் அங்காடி உரிமையாளரின் பெருமெடுப்பிலான தான நிகழ்வே அந்த நெரிசலுக்குக் காரணம். அங்கே பொலிஸாரும் படையினரும் காணப்பட்டார்கள். எனினும் அங்கு பெருகிய மக்களைக் கட்டுப்படுத்த யாராலும் முடியவில்லை. அதனால் ஐ.நா., வின் பிரதிநிதி சிறிது கால தாமதமாக சந்திப்புக்கு வந்தார்.

மேற்சொன்ன பல்பொருள் அங்காடியின் முதலாளி ஏற்கனவே அதுபோன்ற தான நடவடிக்கைகளுக்காக மிகவும் பிரபல்யமானவர். உதவி தேவைப்படுகிறவர்களுக்கு அவர் காசை அள்ளிவீசுவார். அன்றைய தான நிகழ்வுக்கு வெளியிடங்களில் இருந்து குறிப்பாக தூர இடங்களில் இருந்து மக்கள் முதல்நாளே இரவு பயணம்செய்து அங்கு வந்திருந்தார்கள். வயோதிபர்கள், நோயாளிகள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் என்று பல வகைப்பட்டவர்களும் அங்கே இருந்தார்கள். அவர்களைக் கௌரவமான விதத்தில் ஒழுங்குபடுத்தி அதை ஒரு கௌரவமான தான நிகழ்வாகச் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு இருந்திருந்தால், அன்றைக்கு அந்த நெரிசலைத் தவிர்த்து இருந்திருக்கலாம். அல்லது அது ஒரு கட்டுப்படுத்த முடியாத பெரும் விழாவாக வெளியில் தெரிவதை அந்த முதலாளி விரும்பினாரோ தெரியவில்லை. கொடையாளிகள் அல்லது வள்ளல்கள் எல்லாச் சமூகங்களிலுமே போற்றப்படுகின்றார்கள். எல்லா மதங்களிலுமே அவர்களுக்கு உயர்வான இடம் உண்டு. குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் புராண நாயகனாகிய கர்ணன், முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த மன்னன் பாரி போன்றவர்கள் உதாரணங்களாகக் கூறப்படுவதுண்டு. நவீன வரலாற்றிலும் கோடீஸ்வரர்களும் உலகப் பெரு முதலாளிகளும் தாம் திரட்டிய செல்வத்தின் ஒரு பகுதியைத் தானம் செய்கிறார்கள். அல்லது தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கிறார்கள்.

அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழராகிய ராஜ் ராஜரத்தினம் அவ்வாறு கோடிக்கணக்கான ரூபாவை பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். தானம் செய்வதற்கு உழைக்கவேண்டும். உழைத்தால்தான், செல்வத்தைத் திரட்டினால்தான், தானமாகக் கொடுக்கலாம் என்ற பொருள்பட அவர் தன்னுடைய 'சமனற்ற நீதி' என்ற நூலில் எழுதியிருக்கிறார். தொண்டு செய்வது நல்லது. வள்ளல்கள் போற்றுதற்குரியவர்கள். ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியலில் இறங்கலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு எங்கிருந்து வருகிறது ? தமிழகத்தில் எம்.ஜி.ஆர்., விஜயகாந்த் போன்றவர்கள் வள்ளல்களாக போற்றப்படுகிறார்கள். அதனால் இலட்சக்கணக்கான ஆதரவாளர்களை அவர்கள் சம்பாதித்தார்கள். ஈழத்தமிழர்கள் மத்தியில் அவ்வாறு வள்ளல்கள் அரசியலில் ஈடுபடும் ஒரு போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. வள்ளல்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று இந்தக்கட்டுரை கூறவரவில்லை.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் அரசியல் போக்கெனப்படுவது வள்ளல்களுக்கும் கொடையாளிகளுக்கும் வசதியான ஒன்றுதான். கொடைகளின்மூலம் வள்ளல்கள் சமூகத்தில் இயல்பாகவே அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் பெற்று விடுகிறார்கள். அதை அவர்கள் அரசியலில் முதலீடு செய்வது இலகுவானது. ஏற்கனவே தமது தொழில்சார் திறமைகள் காரணமாக புகழடைந்த, செல்வந்தர்களாகிய சிலர் தமிழரசியலில் இறங்கிவிட்டார்கள். செல்வந்தர்களாகவும் பிரபல்யங்களாகவும் இருக்கும் பலர் இறங்கத் துடிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஓர் அரசியல் சூழலில் வள்ளல்கள் இலகுவாக அரசியலில் நுழையலாம். இது அரசியல்வாதியாக இருப்பதற்குரிய தகைமை என்ன என்ற தமிழ்ச் சமூகத்தின் அளவுகோல்களைக் காட்டுகிறது என்று எடுத்துக் கொள்ளலாமா? அதுமட்டுமல்ல தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை முன்னெடுக்கத் தவறிய ஒரு வெற்றிடத்தில்தான் வள்ளல்கள் ஒரு தேசியக் கடமையை தனிப்பட்ட தானமாகவும் கருணையாகவும் கருதி அதன் ஊடாக அரசியலில் பிரவேசிக்க முயற்சிக்கிறார்களா? கூட்டு மனவடுக்களோடும் ஆறாத கூட்டுக்காயங்களோடும், அவநம்பிக்கைகளோடும் காணப்படும் ஒரு சமூகத்தை பண்புருமாற்றத்தின் ஊடாகக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு 2009 க்குப் பின் வந்த எல்லாத் தலைவர்களுக்கும் இருந்தது. ஆனால் அது பொருத்தமான விதத்தில் முன்னெடுக்கப்படவில்லை. அதன் விளைவாக விழுந்த வெற்றிடத்தில்தான் வள்ளல்கள் தலைவர்களாக வர முயற்சிக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்துக்கு இப்பொழுது தேவையாக இருப்பது 15ஆண்டுகளின் பின்னரும் கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஒரு கூட்டு அரசியல் செயற்பாடுதான். ஆனால் அவ்வாறு கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல அரசியலை முன்னெடுக்கவல்ல ஆளுமை மிகுந்த தலைவர்கள் எத்தனை பேர் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு?

மக்களுக்கு நிவாரணம் வேண்டும். உதவிகள் வேண்டும். நிதிவளம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் காசை என்ன செய்வது என்று தெரியாமல் கோவில்களில் கொண்டு போய்க் கொட்டுகின்றது. அந்தக் காசைப் பயன் பெறுமதி மிக்கதாக மாற்றலாம். அதற்கு 2009க்குப் பின்னரான தமிழ் அரசியலைக் குறித்த பொருத்தமான அரசியல் தரிசனமும் பொருளாதார தரிசனமும் நிவாரண தரிசனமும் இருக்க வேண்டும். வள்ளல்களுக்கு அவ்வாறான தரிசனம் இருக்குமாக இருந்தால் பிரச்சினை இல்லை.

ஆனால் வள்ளல்கள் தங்களை புதிய எம்.ஜி.ஆர்.களாகக் கற்பனை செய்துகொண்டு, தான நிகழ்வை நாடகத்தனமாக ஒழுங்குபடுத்தி, பாட்டுக்கு எம்.ஜி.ஆர். போல ஆடி, யூடியூப்பர்களுக்குச் செய்தியாக மாறும் போதுதான், அது விவகாரமாகிறது. தொண்டு நல்லது. தானம் நல்லது. ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியல்வாதிகளாக வர விரும்பினால் அதற்குரிய ஒழுக்கமும் தரிசனமும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும். தானம் ஓர் அர்ப்பணிப்புத்தான். ஆனால் அது மட்டும் போதாது. பொருத்தமான அரசியல் தரிசனம் இருக்கவேண்டும். அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். அதை ஒரு தேசியக் கடமையாக செய்யவேண்டும்.

அற்புதமான ஒரு தமிழ்ப் பழமொழி உண்டு. 'ஒரு கை கொடுப்பது மறுகைக்குத் தெரியக்கூடாது' என்று. தானம் செய்வதால் தனக்குக் கிடைக்கும் புகழையும் பிரபல்யத்தையுங்கூடத் தானம் செய்யத்தயாராக இருக்கவேண்டும். மகாபாரதத்தில் கர்ணன் இறக்கும் தறுவாயில் அவனுடைய தர்மமே அவனுக்குப் பாரமாக இருந்தது. அதனால் கர்ணன் தானம் செய்து தான் சம்பாதித்த புண்ணியத்தையும் தானம் செய்தான். அது புராண கால கர்ணன். அவனுக்குத் தலை காத்த தர்மம் ஒரு பாரம். நவீன அரசியலில் தர்மம் ஒரு முதலீடா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளரும் எதிர்க்காவடிகளும்!

தி.ராஜ்



நீங்கள் சுகதேகியாக இருக்கின்றீர்கள். எந்தவொரு நோய் நிலைமையும் உங்களுக்கு இல்லை. மிக அண்மையில்கூட மருத்துவரைச் சந்தித்திருந்தீர்கள். அப்போதும் அவர் உங்களுக்குளந்தவொருநோய்நிலைமையோ அதற்கான அறிகுறியோ இல்லை என்று சொல்கிறார். ஆனால் உங்கள் அயலவரோ தினமும் உங்களிடம் வந்து, நீரிழிவு வந்தால் என்ன நடக்கும் என்பதைப் பற்றியும், நீரிழிவின் போது உண்ணவேண்டியவை தொடர்பாகவும், நீரிழிவுக்கு எவ்வாறான மருந்துகளை எடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் கருத்துப் பகிர்கின்றார். ஒரு தடவை இரண்டு தடவை என்றில்லை திரும்பத் திரும்ப உங்களிடம் அவர் வந்து இப்படிச் சொல்லும்போது உங்கள் மனதில் என்ன தோன்றும்? ஒரு கட்டத்தில் எனக்கு நீரிழிவோ? என்ற சந்தேகம் வரத்தான் செய்யும்.
இப்படித்தான் சுமந்திரன் அணியும் புதிய பரப்புரை யுக்தியை கையிலெடுத்திருக்கின்றது. தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எதிரான அவர்களின் பரப்புரையும் அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுவர் தமிழ் மக்களிடம் கோரும் ஆணை என்ன என்பது குழந்தைக்கும் தெரிந்திருக்கும். சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்வைக்கப்போவதில்லை. தனிநாடு கேட்பதற்கு சிறிலங்காவின் அரசமைப்பு இடமளிக்காது. எனவே சிறிலங்காவின் அரசமைப்புக்கு உட்பட்டதாக அதிகபட்ச அதிகாரப் பகிர்வையே, தமிழர்கள் தங்கள் தேசங்களில் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய ஒன்றையே தமிழ்ப் பொதுவேட்பாளர் தனது கொள்கையை முன்வைப்பார்.
ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அவரின் ஊதுகுழல் அணியும், சமஷ்டிக்கு குறைவான எந்தவொரு தீர்வுக்கும் தமிழ் மக்கள் இணங்கமாட்டார்கள். 1951ஆம் ஆண்டிலிருந்து சமஷ்டிக்குத்தான் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கிவருகின்றார்கள் என்று தொடர்ச்சியாகக் குறிப்பிட்டு வருகின்றனர்.
அதன் ஓர் அங்கமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனோ, 'இப்போது முன்னெடுக்கப்படுவது விஷப் பரீட்சை. விஷப் பரீட்சையில் நாங்கள் ஈடுபட்டு அசைக்க முடியாத இந்த மக்கள் ஆணையை இல்லை என்று நிறுவுவதற்கு முயற்சி செய்கிறோமா? அப்படி ஓர் ஆணை இல்லை என்று காண்பிப்பதற்கு துடியாய்த் துடிக்கிறோமா? தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாக அந்த விஷப் பரீட்சைக்கு நாங்கள் செல்லவே கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஆகவே தேவையில்லாத அதுவும் ஒரு உதவாத விஷப்பரீட்சை. எங்கள் இருப்பையே இல்லாமல் செய்யப் போகும் நிகழ்வு. இதற்கு நாங்கள் இணங்கினால் இதுவரைகாலம் வரைக்கும் எங்கள் உயிர் மூச்சு என்று சொல்லுகிற எங்கள் இறைமை, எங்களுக்கான சுயநிர்ணய உரிமை அனைத்தையும் இல்லை என்று நாங்கள் சொல்லலும் செயற்பாடாகத் தான் இது இருக்கும்' என்று யாழ்ப்பாணத்தில் நடந்த கருத்துக்களத்தில் முழங்கியிருக்கின்றார். உணர்ச்சிப்பெருக்குடன் பேசியிருக்கின்றார்.

ஆரம்பத்தில் சொன்னதைப்போல தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்குபவர் ஒருபோதும் சமஷ்டிக்கு குறைவான தீர்வுக்கு மக்கள் ஆணையைக் கோரப்போவதில்லை. அப்படியிருக்கவும் திரும்பத் திரும்ப 'சுமந்திரன் அண்ட்கோ' இப்படியொரு பரப்புரையை முன்னெடுப்பது, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் சந்தேகத்தை உருவாக்கத்தான் அன்றி வேறு எதுவுமில்லை.

தமிழ் மக்கள் சமஷ்டிக்கு குறைவான எந்தவொரு தீர்வுக்கும் இணங்கமாட்டார்கள், காலாதிகாலமாக அதற்குத்தான் ஆணை வழங்கினார்கள் என்று முழங்கும் சுமந்திரன், நல்லாட்சிக் காலத்தில் தானும் சேர்ந்து உருவாக்கிய புதிய அரசமைப்பில் 'ஏக்க ராஜ்ஜிய' என்ற முழக்கத்துக்கு முட்டுக்கொடுத்து, ஒற்றையாட்சிக்கு இணங்கியமை எங்கனம் என்பதை அவர் தெளிவுபடுத்தினால் நல்லது.
ஆக தமிழ் மக்களின் ஆணையை மீறிய ஒருவர், தமிழ்ப் பொதுவேட்பாளர் மீது சந்தேகத்தை உருவாக்கி தோற்கடிக்க நினைப்பதை தமிழ் மக்களின் நலனுக்கானது என்று நினைப்பதைவிட வேறென்ன அபத்தம் இருக்கப்போகிறது? இவற்றுக்கு அப்பால் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பேராசிரியர் சர்வேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் சுமந்திரனின் ஏற்பாட்டில் நடந்த கருத்துக்களத்தில் உரையாற்றும்போது, 'தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையில்லை என்று குறிப்பிட்டதுடன் 2024ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கி அவரது கொள்கைக்கு ஆணை கோருவீர்கள். பின்னர் அடுத்த 5 ஆண்டுகளில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது மீண்டும் இன்னொரு தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கி ஆணை கோருவீர்களா? இப்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் ஆணை கோரிக்கொண்டே இருக்கப்போகின்றீர்களா?' என்ற கேள்வியை முன்வைத்தார்.
அவர் இந்தக் கேள்வியை முதலில் தன்னை நிகழ்வுக்கு பேசுவதற்கு அழைத்த சுமந்திரனிடம் அல்லது அவரது கட்சியினரிடம் எழுப்பியிருந்தால் நல்லது. சுமந்திரன் அந்த நிகழ்வில் உரையாற்றும்போது 1951ஆம் ஆண்டே தமிழ் அரசுக் கட்சி சமஷ்டி நிலைப்பாட்டை முன்வைத்தது. மக்கள் சமஷ்டிக்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்று சொல்லியிருந்தார். அப்படியானால் ஏன் ஒவ்வொரு தேர்தலிலும் அதே சமஷ்டியை முன்வைத்து மீண்டும் மீண்டும் மக்கள் ஆணை கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள்? இந்தக் கேள்விக்கு என்ன பதிலோ அதே பதில்தான் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆணை கோருவதற்கும் பதிலாக அமையும் என்பதை பேராசியர் சர்வேஸ்வரன் புரிந்துகொள்வார் என்று நம்புவோம்.

# ஆயுத அரசியல்!

ஆர். பிரகாஷ்




உலக பணக்கார நாடுகளின் பட்டியல் அண்மையில் வெளிவந்தது. இதில், அமெரிக்காவை இரண்டாவது இடத்துக்குப் பின் தள்ளி அதிர்ச்சியளித்தது சீனா.
இப்படியிருக்கையில் தற்போது ஆயுத விற்பனைகள் தொடர்பான பட்டியலில் ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் பேரதிர்ச்சியளித்துள்ளது அமெரிக்கா. அதாவது கடந்த வருடம் இடம்பெற்ற ஆயுத விற்பனையில் 58 வீதத்துக்கும் மேற்பட்ட பங்களிப்பை அமெரிக்கா வழங்கியுள்ளது. இது இரண்டாவது இடத்தில் உள்ள சீனாவை விட சுமார் 4 மடங்கு அதிகமாகும்.
ஸ்டோக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு மையம்தான் இந்த ஆய்வை நடத்தியுள்ளது. அந்த அமைப்பு உலகில் கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவத் தளபாட விற்பனையில் முன்னணியில் உள்ள 100 நிறுவனங்களைப் பட்டியலிட்டுள்ளது. இதில் 47 நிறுவனங்கள் அமெரிக்காவைச் சார்ந்தவை. அதாவது 47 வீதமான நிறுவனங்கள் அமெரிக்காவினுடையன.

### தொடர்ந்து முதலிடம்

இந்த 100 நிறுவனங்களும் கடந்த வருடம் மேற்கொண்ட இராணுவத் தளபாட வர்த்தகத்தின் இலங்கைப் பெறுமதி 95 ஆயிரம் கோடி ரூபா. அதில் 58 வீதமான வர்த்தகத்தை அமெரிக்க நிறுவனங்கள் ஆற்றியுள்ளன. 13 வீதமான வர்த்தகத்தை சீனாவும், 7.1 வீதமான வர்த்தகத்தை இங்கிலாந்தும் மேற்கொண்டுள்ளன.
பட்டியலில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவுக்கும் இரண்டாவது இடத்தில் உள்ள சீனாவுக்கும் இடையிலான வேறுபாடு சுமார் 4 மடங்கு. சர்வதேச இராணுவத் தளபாட விற்பனையில் இரண்டு வீதமான அல்லது மூன்று வீதமான வேறுபாடே பெரியவிடயம் எனும்போது கிட்டத்தட்ட நான்கு மடங்கு வேறுபாடு முதலிரு நாடுகளுக்கும் இடையில் பேணப்படுகின்றமையானது கற்பனைக்கும் எட்டாத உயரம்தான்.

### சர்வமும் இராணுவம்

அமெரிக்கா தன் பொருளாதாரப் பலத்தை இராணுவத் தளபாட விற்பனையில் வைத்துக் கட்டமைத்திருப்பது இந்த வருடமோ அல்லது கடந்த வருடமோ நடந்த விடயமல்ல. இது இடம்பெற்றுப் பல தசாப்தங்கள். இதனால்தான் அமெரிக்கா மீது உலகப்பொதுவான குற்றச்சாட்டு ஒன்று உள்ளது.
அதாவது, 'உலக நாடுகளிடையே போர் ஏற்படுவதை அமெரிக்கா விரும்புகின்றது. நாடுகளுக்கு எதிராக ஆயுதக் குழுக்களும் கிளர்ச்சிக்குழுக்களும் போரிடுவதை அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.
பிற நாடுகளுக்கு மட்டுமல்லாமல் பிற ஆயுதக் குழுக்களுக்கும் அமெரிக்கா இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்து வருகின்றது' என்பன அந்தக் குற்றச்சாட்டுளாக உள்ளன.
தனது ஆயுத விற்பனைக்காக அமெரிக்காவே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைத் தோற்றுவித்தது என்ற கருத்துகள் காலப்போக்கில் ஆதாரபூர்வமாக எண்பிக்கப்பட்டமையை நினைவிருக்கலாம்.

### ரஷ்யாவுக்கு இடமில்லை

பொருளாதாரத்தில் அமெரிக்காவுக்கு சீனா எவ்வாறு போட்டியோ அவ்வாறு ஆயுதத்தில் போட்டிபோடும் நாடு ரஷ்யாஆனால், இந்தப் பட்டியலில் ரஷ்யாவின் கதையே இல்லையே? என்ற கேள்வி பலருக்கும் வரலாம். உக்ரைன் போர் காரணமாக, ரஷ்யாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றன. அத்துடன், உக்ரைனுக்கு எதிரான போருக்குத் தேவை என்பதற்காக ரஷ்யாவும் ஆயுத விற்பனையை நிறுத்தியே வைத்திருக்கின்றது. இவையனைக்கும் ஒன்றுசேர்ந்துதான் அமெரிக்காவை தனிக்காட்டு ராஜாவாக மாற்றியிருக்கின்றன. உலகில் எந்த மூலையில் போர் நிகழ்ந்தாலும், அமெரிக்கா தன் தலையை கொஞ்சமேனும் நீட்டிவிடுவதன் சூட்சுமமும் இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ கோகுலராகவன்

# புரட்சிக்குள் வாழ்ந்தவனின் காதல் கவிதைகள்

பப்லோ நெருடா (Publo Neruda) சிலி நாட்டைச் சேர்ந்த கவிஞர். ஸ்பானிய மொழியில் எழுதியவர்.

நெருடா இன்றுவரை உலகின் தலைசிறந்த கவிஞராகக் கருதப்படுகின்றார். அந்தளவுக்கு அவர் கவிதைகள் தரமானவை. இதனால் 1971 இல் இலக்கியத்துக்கான நோபல் விருதை பெற்றுக்கொண்டவர்.

கம்யூனிசக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட நெருடா, சிலி புரட்சியில் சல்வடோர் அலன்டேயுடன் (Salvodor Allende) இணைந்து செயற்பட்டவர்.

அலன்டே ஆட்சியைக் கைப்பற்றிய பின் அவரால் பல நாடுகளுக்கும் தூதுவராக நெருடா நியமிக்கப்பட்டிருந்தார். நெருடா இலங்கையிலும் தூதுவராகக் கடமையாற்றி இருக்கிறார்.

13 வயதில் நெருடா எழுதத் தொடங்கினார்.

அவருடைய ஆரம்பகாலப் பாணி நடப்பியல்வாதம் (surrealism ) சார்ந்ததாக இருந்தது. இது இரண்டாம் உலக மகா யுத்தத்துக்கு பின்னர் தொடங்கிய ஒரு எழுத்து வகை.

நெருடா அரசியல்,காதல் ,வரலாறு சார்ந்த கவிதைகளை எழுதினார்.

அவரது காதல் கவிதைகளின் தொகுப்பு "இருபது காதல் கவிதைகளும் ஒரு பிரிவுப்பாடலும்" (Twenty love poems and a song of Despair) என்ற பெயரில் 1924 இல் வெளியானது.

நெருடா உள்ளத்தைக் கவரக்கூடிய விதத்தில் மென்மையாக காதல் கவிதை சொல்லக்கூடியவர்.

இதனால்தான் அவர் இன்றும் உலகப்புகழ் பெற்ற கவிஞராகத் திகழ்கின்றார்.

சிலியில் அலண்டே ஆட்சி கவிழ்க்கப்பட்டு சர்வாதிகாரி ஒகொஸ்ரோ பினோசெற் (Augusto Pinochet ) ஆட்சியைக் கைப்பற்றியதும் நெருடா பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனால் ஐந்து வருடம் நாட்டை விட்டு தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டி இருந்தது.

இதன்போது அவர் இத்தாலி நாட்டில் இருந்த காலத்தில் "தபால்காரன்" (The postman)என்ற இத்தாலிய திரைப்படத்தில் நடித்திருந்தார். இதில் நாயகனுக்கு காதல் கவிதை எழுதிக் கொடுத்து அவன் காதல் வெற்றி பெற உதவுவதாக நெருடா நடிப்பார்.

மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வந்து வாழ்ந்து கொண்டிருக்கும்போது 1973 இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். இதற்கு சிகிச்சை பெறச்சென்றபோது அப்போதைய அரசால் விஷ ஊசி ஏற்றப்பட்டதாக நெருடா சந்தேகப்பட்டார். இதன் தொடர்ச்சியாக அந்த ஆண்டே நெருடா காலமாகிவிட்டார்.

பப்லோ நெருடாவின் "மிகத்தூரப் போகாதே" (Dont go far off) என்ற காதல் கவிதையை தமிழாக்கம் செய்து தருகிறேன். காதலை நுண்ணியதாகச் சொல்லும் அற்புதமான கவிதை. காதலின் பிரிவை இது போன்ற வரிகளில் எந்தக் கவிஞரும் கவிதை எழுதியதாக எனக்குத் தெரிய வில்லை.



## மிக தூரப் போகாதே...

என்னைவிட்டு ஒருநாள் கூட
நீண்டதூரம் விலகிப் போகாதே.
ஏனென்றால் .......
ஏனென்றால் .......
எப்படி சொல்வதென்று தெரியவில்லை.

ஒருநாள் மிக நீண்டது.

யாருமற்ற புகையிரத நிலையத்தில்

உனக்காக காத்திருப்பேன்.
ஆனால் புகையிரதம் எங்கோ நிறுத்தப்பட்டு விட்டது.
என்னை விட்டு

ஒரு மணி நேரமும் விலகாதே.
ஏனென்றால்.
சிறுதுளி இடைவெளி கூட

எமக்கிடையில் புகுந்துவிடும்.

போக்கிடம் அற்ற ஆன்மா

புகுந்துகொள்ள உடல் தேடி அலைகிறது.
என் இதயத்தை திணற வைக்கிறது.

கடற்கரையில் உனது நிழல்

கரைந்து போகக் கூடாதே.

எதுவுமற்ற நிலையில்

உன் கண் இமைகளை மூடிக் கொள்ளாதே.

என் அன்பே ஒரு கணமும் எனைப் பிரியாதே.
ஏனெனில்
இக்கணத்தில் நீ நீண்டதூரம்
போய் விடுவாய்.
இந்த பிரபஞ்சம் முழுவதும் திக்கற்று நிற்கிறேன் .
நீ மீண்டும் வருவாயா?
அல்லது
என்னை இறப்பதற்காக விட்டுச் செல்வாயா?...

ஆங்கிலத்தில் : வில்லியம் ஓடெலி (William O'Daly)
தமிழில்: கோகுலராகவன்






# உலாப்புதினம்

○ இராகவன்

பாகம் 2

பத்திரகாளி கோவில் இராத் திருவிழாவில் வில்லிசையும் முக்கியமான நிகழ்ச்சியா நடந்தது. அப்ப சின்னமணியின்ர வில்லிசைதான் வலுபேமஸ். சின்னமணி அச்சுவேலியாள். சத்தியவான் சாவித்திரி நாடகத்தில சின்னமணி 'யமன்' வேடத்தில நடிச்சு நடிச்சு அந்த வேடம் அவருக்கு வாலாயமாப் போச்சு. சின்னமணியை உங்களுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கும். ஆள் நல்ல கறுவல் தடியர். அதுகும் கட்டையர். அப்ப 'யமன்' வேடம் போட்டா எப்பிடியிருக்கும்? கொஞ்சங் கற்பனை பண்ணிப் பாருங்கோவன். அதாலதான் அந்தாளுக்கு 'யமன்' சின்னமணியெண்டு அடைமொழிப் பெயர் வந்தது. இராத்திருவிழாவில சின்னமணி 'சத்தியவான் சாவித்திரி', 'அரிச்சந்திரன் கதை', 'கோவலன் கண்ணகி கதை', 'ஏழு பிள்ளை நல்லதங்காள் கதை' எண்டு கனக்க வில்லிசை செய்தவர். ஆள் நல்ல முசுப்பாத்தியளும் விடும்.

இதில ஒரு சோகமான சங்கதியென்னவெண்டால் என்ர அம்மாவுக்கு ஒரேயொரு தம்பிதான். பொன்னம்பலம் எண்டு பெயர். அந்தாள் முல்லைத்தீவில 'சீ.ரி.பி' கொண்டக்றரா வேலை செய்துகொண்டிருக்கேக்குள்ள ஒருநாள் வளத்த நாயைக் குளிக்க வாக்கேக்குள்ள சாதுவா வாய் வைச்சிட்டுது. அந்தாளும் வளர்த்த நாய்தானே எண்டு ஏற்பூசி கீற்ப்பூசியொண்டும் போடாமல் கவனிக்காமல் விட்டுட்டுது.

அதோட பண்டி இறைச்சி, பிலாப்பழமெண்டு 'கொண்றோல்' இல்லாமல் சாப்பிட்டிருக்குது. அந்தாளின்ர கெடுகாலம் ஏற்பாக்கி ஆளையே முடிச்சுப்போட்டுது. முல்லைத்தீவிலயிருந்து பிரேதத்தை இஞ்சை கரவெட்டிக்குக் கொண்டு வந்துதான் செத்தவீடு கொண்டாடினவை. ஒருநாள் பொழுதுபடேக்குள்ளதான் பிரேதம் இஞ்சை வந்தது. அம்மா, அப்பா, அண்ணராக்கள் எல்லாம் என்னை நவண்ணா வீட்டில விட்டுட்டுப் போட்டினம். அப்ப பத்திரகாளி கோயில்ல திருவிழா நடந்து கொண்டிருந்திச்சுது. அண்டைக்கிரவு சின்னமணியின்ர சத்தியவான் சாவித்திரி வில்லிசை நடக்கஇருந்தது. எனக்கு போறதோ விடுறதோ எண்டு தெரியேல்லை. நவண்ணாதான் 'அதெல்லாம் பாக்கலாம். ஒண்டுக்கும் யோசிக்காமல் என்னோட வாடாப்பா!' எண்டு உருவேத்திக் கூட்டிக் கொண்டு போனவன். எண்டாலும் வழமைபோல இயல்பாயிருந்து நிம்மதியா அந்த வில்லிசையைப் பாக்கமுடியேல்ல. ஒரு குற்றஉணர்வு நெஞ்சில உறுத்திக்கொண்டேயிருந்திச்சுது. அதால இண்டை வரைக்கும் அந்த வில்லிசை நிகழ்ச்சியை என்னால மறக்கமுடியேல்ல. மற்றது பிரசங்கங்களும் இராத்திருவிழாவில நடக்கும். அதுக்குப் பெரிசாச்சனம் வராது. எண்டாலும் என்னை நவண்ணா இழுத்துக்கொண்டு போவான். பருத்தித்துறைச் சாரதா சேவாச்சிரமத்திலயிருந்து சுவாமி சித்ரூபானந்தா வந்து இரண்டு மூண்டு பிரசங்கம் செய்திருக்கிறார். அந்தாள் நல்லவிசயகாரன். இங்கிலீசில ஒரு விசயத்தைச் சொல்லிப்போட்டுப் பிறகு தமிழிலயும் தெளிவா அதைச் சொல்லும். அடிக்கடி குதிக்காலில எம்பியெம்பிப் பேசும். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் அப்படித்தான் பேசிறவர்.

(தொடரும்)

44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை
## (05.05.1934 - 20.04.2024)

3

O பா.துவாரகன்

## தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானம்

**மாலோன் மருகனைக் கவர்ந்த திருமுருகாற்றுப்படை**

"ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவனுக்குத் தலைக்கு எண்ணெய் இடுவதென்றால் ஒரே வெறுப்பு. கிழமை நாள்களிலே தப்பிவிட்டாலும் சனிக்கிழமை காலைகளில் அவன் தப்பிக்கொள்வதென்பது அரிது. (அருமை இன்மைமேல் நின்றது - பரிமேலழகர்) அவன் தந்தை இடது உள்ளங்கையில் எண்ணெயை எடுத்துக் கொண்டு வந்துவிடுவார். அன்றும் ஒரு சனிக்கிழமை. கையில் எண்ணெயுடன் வந்த தந்தை, **'இதென்னடா! தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானம்போல் இருக்கிறதே உன்தலை'** என்றார். சிறுவனுக்கு ஏதோ விளங்கியது மாதிரியும் விளங்காதது மாதிரியும் ஒரு மயக்கம், ஆனால் அந்தத் தொடர் அவனுக்குப் பிடித்து விட்டது. எண்ணெய் இடப்படுவதை அவன் மறந்துவிட்டான். 'என்னப்பா சொன்னீர்கள்?' என்று கதை கேட்கும் ஆர்வத்தோடு உட்கார்ந்து விட்டான். 'கார்காலத்தில் ஆவணி, புரட்டாதி மாதங்களில் முதன்முதற் பெய்த மழையால் நனைந்த நிலம்போல உன் தலை எண்ணெய்பட்டதும் காட்சி தருகிறதடா' என்றார் தந்தை.

சிறுவனுக்கு அந்தத் தொடரில் ஏதோ கவர்ச்சி பிறந்து விட்டது. 'இது எங்கே வருகிறது?' என்று கேட்டான். 'திருமுருகாற்றுப்படை என்றொரு நூல், அதிலே வருகிறது' என்றார் தந்தை. 'அதை நான் படிக்கவேணும்' இது சிறுவன். தந்தை சிரித்தார்.....

எண்ணெய் இட்டுக்கொள்ளத் தயங்கிச் சனிக்கிழமை என்றொரு நாளே வாரத்தில் இருக்கக்கூடாதென்று நினைத்த சிறுவன் அன்றிலிருந்து சனிக்கிழமைகள் எப்போது வரும் என்று எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டான். சனிக்கிழமை காலையில் 'ஏன் இன்னும் எண்ணெய் இடவில்லை?' என்று கேட்கவும் ஆரம்பித்துவிட்டான் அந்தச் சிறுவன் வேறுயாருமல்லன்: உமாமகேசுவரன்.

எதையும் சுவையாகச் சொல்லி இரசிக்கச் செய்வதில் பண்டிதர் அப்பாவுக்கு(கதிரிப்பிள்ளை) நிகர் அப்பாதான். அதே வேளையிற் பெரிய நூல்களைக்கூடப் படிக்க வேண்டும் என்று சிறுவரும் ஆர்வமுறத்தக்க வகையில் அறிமுகம் செய்துவைப்பதில் அவர்கள்போற் பிறிதொருவரை நாங்கள் கண்டதில்லை.

இது பண்டிதர் சி. கதிரிப்பிள்ளையின் நினைவு மலருக்கு உமாமகேசுவரன் 'அப்பா எனும் தெய்வம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் அறிமுகம்.

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களில் முதன்மையானது. ஒரு கலைஞனது படைப்புகளில் ஈடிணையற்ற, 'மெத்தத் திறமான'ஆக்கத்தை ஆங்கிலத்தில் மக்னம் ஒபஸ் (magnum opus) என்று சொல்வார்கள். நக்கீரர் இயற்றிய நூல்களில் திருமுருகாற்றுப்படையே 'மக்னம் ஒபஸ்' என்று ஆசிரியர் உமாமகேசுவரன் கூறுவார்.

சிவதொண்டன் நிலையத்து யோகசுவாமி திருமுருகாற்றுப்படையை சிலரைப் படிக்குமாறு சொன்னதை அறியக் கிடைத்தது. பொதுவாக எந்த ஒரு பதிகத்திலும் அதன் நிறைவில் அந்தப் பதிகத்தைப் பாடுவதால் கிடைக்கும் பலனை அதன் ஆசிரியர் பாடுவது வழமை.

சிவதொண்டன் செல்லத்துரை சுவாமிகள் அருளாளர்களின் பாடல்களில் சிலவற்றைக் கூறி(கந்தர்கலி வெண்பா, திருமுருகாற்றுப்படை) படித்து வாருங்கள் என்று சொன்னால் அந்த வாசகம், அந்தப் பதிகம் மந்திரத்தை நிகர்த்தது என்று சிவதொண்டன் நிலையத்துப் பிள்ளைகள் போற்றிப் பாராயணம் செய்வர்.

சுவாமி ஒரு பதிகத்தை, திருமுறையைப் படிக்கச் சொன்னால் அதற்கு ஆற்றல் அதிகம். அதைப் பாராயணம் செய்வது இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்க வல்லது என்றும் அறிவார். சிவதொண்டனிடமிருந்து அறிந்து கொண்டேன். திருமுருகாற்றுப்படையைப் படிக்கப் படிக்க அன்பு பெருகும் என்று எங்கள் சுவாமி சொன்னதையும் அதனைப் பாடி நன்மக்கட் பேறடைந்த செய்தியையும் அறிந்திலோம். யோகசுவாமியின் நற்சிந்தனையில் ஒரு வாசகம் "கீரன் சொன்ன வாசகங்கேட்டுப் பேரன்புற்றுப் பிணியை நீக்கி" என்றுளது.

குன்றுதோறாடும் குறிஞ்சிக்கிழவன், குமரக்கடவுளை அன்பினால் வழிபட்டு, "நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி" அருளைப் பெற நறுமணங் கமழும் இனிய சொற்களால் நக்கீரன் கட்டிய மாலை முருகாற்றுப்படைக்கு நிகரேது.

**மிகச்சிறந்த நினைவாற்றல்**

பண்டிதர் உமாமகேசுவரன் எந்த ஒன்றையும் மேற்கோள் காட்டும் போது மூலத்தை அதாவது மூல நூலைப் பார்த்துத்தான் அதனை மேற்கோள் காட்டுதல்வேண்டும். நினைவிலிருந்து சொல்லக் கூடாது. மனித மூளையின் நினைவாற்றலை விட எப்போதும் சரியாகச் சொல்லக் கூடியவை நூல்கள் தான் என்பார்.

உமாமகேசுவரனிடம் மிகச் சிறந்த நினைவாற்றல் இருந்தது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப்போல அவரிடம் சங்கப் பாடல்கள் நினைவிலிருந்தன. அப்பா(கதிரிப்பிள்ளை) இருதடவை பாடலைச் சொல்லி பொருளை விளங்கப்படுத்த பாடல் நினைவுக்கு வந்துவிடும் என்பார். இத்தகைய கற்பித்தல் ஆற்றல் உமாமகேசுவரிடமும் இருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் ஆசிரியரைச் சந்திக்கச் சென்றேன். அப்போது அவர் கோண்டாவிலில் வசித்தார். சிறு பிள்ளைகள் இருவருக்குப் பாடம் எடுத்தார். அவர்களுக்கு இராமச்சந்திரகவிராயர் இயற்றிய காணாமற்போன பாக்குவெட்டிப் பாடலைச் சொல்லிக் கொடுத்தார். அவர் பாடலைச் சொல்லிக் கொடுத்து பொருளை விளங்கப்படுத்தியதும் அந்தப் பிள்ளைகள் பாடலைப் பார்க்காமலேயே முழுமையாக ஒப்புவித்துப் பொருளையும் சொன்னார்கள்!

*விறகு தறிக்க கறி நறுக்க*
*வெண்சோற் றுப்புக் கடகு வைக்கப்*
*பிறகு பிளவு கிடைத்த தென்றால்*
*நாலா றாகப் பிளந்து கொள்ளப்*
*பறகு பறகு என்றே சொறியப்*
*பதமா யிருந்த பாக்கு வெட்டி*
*இறகு முளைத்துப் போவது ண்டோ?*
*எடுத்தீ ராயிற் கொடுப்பீரே*

**இலட்சியமும் அதை அடைவதற்கான வழியும்**

2006 ஆம் ஆண்டு ஒரு நாள் தெகிவளை உவின்சர் அவனியுவில் ஆசிரியரைச் சந்திக்கச் சென்றபோது இலட்சியத்தை விட இலட்சியத்தை அடைவதற்கான வழிதான் மிக முக்கியம் என்று கூறினார். இலட்சியத்தை, இலக்கைத் தவறவிடலாம். ஆனால் அதை அடைவதற்கான வழியைத் தவற விடக்கூடாது என்றார். இதற்குத் திருக்குறள் ஒன்றைக் கூறி மிகவிரிவான விளக்கம் அளித்தார்.

*ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை*

மேலே குறள் 656 இல் கூறப்பட்டுள்ள கருத்தை விளக்கிய போது தமிழரது அறத்தைப் பற்றியும் வடமொழி நூல்கள் கூறும் அறத்தையும் மேற்குலகின் அறத்தையும் பரிமேலழகரது உரையின் விசேடத்தையும் எடுத்துக் காட்டினார்.

பெற்றோரும் மனைவியும் பிள்ளைகளும் பசியால் வாடுமிடத்து துயரின் எல்லைக்குச் சென்று அதைத் தாங்காது அறன் அல்லாத வழியிற் சென்றாயினும் அவர்களது பசியைப் போக்குதல் தகும் என்று வடமொழி அறநூல்கள் கூறுகின்றன. ஆனால் திருக்குறள், தமிழ் அறநூல்கள் அவ்வாறு கூறவில்லை என்றார்.




மேற்குலகில் பயனோக்குக் கோட்பாடு அல்லது இறுதி நிலைப்பயன்பாடு (Utilitarianism) என்ற கொள்கை 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்தது. விக்டர் ஹ்யூகோ பிரெஞ்சு மொழியில் எழுதிய லே மிசரபில் (Les Misrables,) என்ற நாவல் 1872 இல் வெளிவந்தது. இந்த நாவலின் பிரதான பாத்திரம் ஜாம் வல்ஜான் (ஜீன்வல்ஜான் Jean Valjean) பட்டினியால் வாடும் தனது சகோதரியின் பிள்ளைகளின் பசிபோக்க தவறான வழியில் ரொட்டிகளை பெறமுற்படுகின்றபோது கைது செய்யப்பட்டு பின்னர் 19 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுகிறது. ஐரோப்பிய சமூகத்தில் தவறான வழியில் ரொட்டியை பெற்றமை நியாயமாகப் பார்க்கப்படுகிறது. இந்த நாவலை சுத்தானந்த பாரதியார் தமிழில் ஏழைபடும்பாடு என்ற பெயரில் பிரேஞ்சிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தார்.

மேலுள்ள திருக்குறள், தன்னைப் பயந்தவள் பசியோடிருப்பதைக் காணும் வறியவனாயினும் அந்தத்தாயின் பசியைத் தணித்தற் பொருட்டு அறிவுடையோர் பழிக்கும் வழியிற் சென்று தாயினது துன்பத்தைப் போக்காதிருப்பாயாக என்று அறம் உரைக்கின்றது.

தாயின் பசியைப் போக்குவது இலட்சியமாயிருப்பினும் நல்லவழியிற் சென்று தான் அதனை நீக்கவேண்டும் என்று சொல்வார். அறமல்லாத வழியில் எங்களது இலட்சியத்தை அடைய முற்படக் கூடாது. இது அனைத்துக்கும் பொருந்தும் என்பார்.

உமாமகேசுவரன் தந்தையின் (கதிரிப்பிள்ளையின்) நினைவு மலருக்கு எழுதிய கட்டுரை பின்வரும் வாசகங்கள், சுலோகங்களுடன் நிறைவடைகிறது:

"மரணம் எந்தக் கணமும் எமை நெருங்கலாம். காலன் தலைமயிரிற் பிடித்திழுத்துச் செல்லக் காத்திருக்கிறான் என்ற நினைவுடன் அன்றறிவாமென்னாது - அறஞ்செய விரும்ப வேண்டும். - இவை அப்பா அடிக்கடி கூறும் அறிவுரைகள்.

நீயே என் தாய்; நீயே என் தந்தை; நீயே என் சுற்றம்; நீயே என் தோழன்; நீயே என் வித்தை; நீயே என் பெறலருந் திரு; அனைத்தும் நீயே; நீயே என் தேவதேவன்.

என்ற பொருள் தரும் சுலோகம் ஒன்றைச் சொல்லி உருகுவது அப்பாவின் வழக்கம். அப்பா எனும் தெய்வத்தை நினைக்கும் போதெல்லாம் அந்தச்சுலோகம் தான் நினைவில் எழுகிறது."

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org